1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
'CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 24-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு ஆனிமாதம் 26-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## கம்யூனிஸம் சொல்வதென்ன?

மதம் இல்லை, கடவுள் இல்லை—ஒழுக்கம்என்பது இழுக்கு—சமத்துவம் புதுரகம்—சுதந்தரம்சொல்லளவே—நிசந்தானே? திரு. டக்ளஸ் ஹைட் அவர்கள் ஆங்கிலதேசவாசி. பழுத்த கம்யூனிஸ்தர். கம்யூனிஸ்த பத்திரிகையின் பல்லாண்டு ஆசிரியர். கம்யூனிஸத்தின் சுயரூபத்தைக் கண்டார். மிரண்டார். விரண்டுவிட்டு ஓடிவந்தார். கம்யூனிஸத்தைப் பெற்றவர்கள்வளர்த்தவர்களின் நூல்களை ஆதாரமாகக் கொண்டு அவர்சொல்வதைவாசியுங்கள்.

நுணலும் தன்வாயால் கெடும் என்றான் தமிழ்அறிஞன். தமிழ்நாட்டில் ஒருகம்யூனிஸ்த தினத்தாள் அழுகிறது. அலறுகிறது. "ஐயோநம்மந்திரிமார்கள் மதப்பிரசாரகர்கள் ஆகிவிட்டனரே, தெய்வபக்தியை வளர்க்கத் தொடங்கிவிட்டனரே" என்று ஒப்பாரிவைக்கிறது. கம்யூனிஸத்திற்குத் தெய்வபற்றுதலும், மதப்பிரீதியும் இருக்குமேயாகில் ஏன் இந்தஓலம்?

"கடவுள் இல்லை" யென்றவாதத்தோடு கம்யூனிஸம் நிற்கிறதா? "கடவுள்உண்டென்று நம்புவதை எங்குள்ளமனிதரும் நிறுத்தப் பிரயாசப்படவேண்டும்" என்றல்லவா சொல்லுகிறது. என்ன துன்பம்வந்தாலும் மேலேயுள்ள கடவுள்பார்ப்பார், உதவுவார்என்று எந்நாளையதமிழனும் சொல்வான். கம்யூனிஸக் கூட்டங்களின்முடிவில் கடைத்தெடுத்த அம்மணிகள் என்ன சொல்கிறார்கள்? "நம்மைக்காப்பாற்ற மேலிருந்து நமக்குஒரு துணையும் தேவையில்லை; அரசர்கள் அதிபதிகள்மேலும் எங்களுக்கு நம்பிக்கை இல்லை." கம்யூனிஸத்தினது ஆடும்மனக் கோட்டையின் அஸ்திவாரம் எது? லோகாதாயக்கொள்கை. "உலகில்உள்ள எல்லாக்காரியமும், காரணமும் சடப்பொருள் ஒன்றே." இதில் ஆத்துமாவுக்கோ, தெய்வத்திற்கோ இடம்ஏது? "வளர்ச்சி, முன்னேற்றம் என்பதெல்லாம் ஒன்றுக்கொன்று மாறுபாடுள்ளவைகளின் ஓயாதபோராட்டத்தினால் ஏற்பட்டபலன் அல்லது சிதைவு." கம்யூனிஸத்தைத் தோற்றுவித்த எங்கல்ஸ்என்பவன் தன்நூலிற் பின்வருமாறு எழுதினான். 'மனிதனுடைய வாழ்க்கையைப்பாதிப்பது, நடத்துவது, வெளியுள்ள சக்திகள். இந்தச்சக்திகளைக் கனக்கண்டவன்போல மனிதன் மதம் என்று சிருஷ்டித்துக்கொள்ளுகிறான். இந்தமனப்பிரேமையே, இந்தவெறும்கற்பனையே மதம்.. ....நீதிஸ்தலங்களோ, அரசியல் ஸ்தாபனங்களோ, மதஸ்தாபனங்களோ, இவைகளுக்கெல்லாம் காரணம் அல்லதுஅடிப்படைப்பொருள் ஆதாரச்சூழ்நிலை. கம்யூனிஸத்தின் திட்டங்களுக்கெல்லாம் அஸ்திவாரம்போன்றது எது? கடவுள் இருக்கிறார் என்ற விசுவாசத்தினது அணுவின் அணுமுதலாய் உலகில்ஒரு பக்கமும் இராதபடி அழிக்க வேண்டும்என்பதாம்.

சோபியாநகரத் தாய்ஒருத்தி வருந்துகிறாள். "என்மக்கள் எதற்காக வாழவேண்டும்? எதை விசுவசிக்கவேண்டும் என்று இல்லை. கம்யூனிஸ்தகட்சித்தலைவர்கள் எது நல்லது என்று சொல்லுவார்களோ,

— ஜெயம்ஜீ —

அதுநல்லது. அவர்கள் கெட்டது என்று சொல்வது கெட்டது. சுரம்கண்டவன் கண்டகனவுக்கு நிகரான இந்தஅபிப்பிராயம் நாளுக்குநாள்மாறும். இன்று நல்லதானது நாளைக்குக் கெட்டது." பால்க்கன்நாட்டில் வழங்கும் ஒருபாடப்புத்தகத்தில் "கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று நாங்கள் விசுவசிப்பதில்லைஎனச் சொல்லவும்வேண்டுமா? ஒழுக்கம், தர்மம் என்பதெல்லாம் வகுப்புவாதத்தைப் பொறுத்தது. வேறெந்தவகை ஒழுக்கமும், தர்மமும் வெறும் பித்தலாட்டம்." 1947-ம் ஆண்டு ஆனிமாதம் கம்யூனிஸப்பத்திரிகை எழுதும்: "மதத்துவேஷமானபிரசாரம் கம்யூனிஸ்தகல்வியின் முக்கியஅம்சம். கம்யூனிஸ்தவாலர்கள் இதை நன்கு உணர்ந்திருக்க வேண்டும்."

1949-ம் ஆண்டு சித்திரை மாதம் கம்யூனிஸ்த போதனைமுறை வெளியீடுஒன்று சொல்லும்: "கம்யூனிஸ்த கல்வியின் நோக்கம், மதம் கொஞ்சநஞ்சம் இருந்தால் அதைஅழிப்பதாம்; சாஸ்திரத்திற்கும், மதத்திற்கும் பெரும்முரண்பாடுஉண்டென்று காட்டு[illegible] மக்களை[illegible]

தில் உலகின்சாயல் ஒன்றுஉள்ளது; புத்திக்கொவ்வாத குழுகியதீமையான அச்சாயல்தான் மதம். மதத்தைக் கற்றுக்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## நீதிமான்களைவிடப் பாவிகள்மேல்...

புண்ணிய சாங்கோபாங்க மதுர வாசனையுடன் 1922-ம் ஆண்டு ஆடி மாதம் 16-ந் திகதி அமலனடிசேர்ந்த சங். யோசப்பா மெனேன்டீஸ் எனும் கன்னிகாஸ்திரீக்கு நமது ஆண்டவர் வெளிப்படுத்தியது.

நாம் ஆத்துமங்களை எவ்வளவாகநேசிக்கிறோமென்றால் நமது உயிரையே அவர்களுக்காகக் கொடுத்தோம். இந்தநேசம் நாம் சற்பிரசாத பேழையில் ஓர்கைதியேபோல் வசிக்கச்செய்கிறது. அப்பத்தின் குணங்களுக்குள் நாம் மறைந்து, இராப்பகலாய்ச் சிறுவெள்ளை அப்பத்துக்குள் ஏறக்குறைய இருபது நூற்றாண்டுகளாக வசித்திருக்கிறோம். மறதி, தனிமை, நிந்தை, தேவதூஷணங்கள், தேவதுரோகங்கள் ஆகியஇவைகளை நாம் நேசத்தைமுன்னிட்டுப் பொறுமையுடன் அங்குசகித்து வருகிறோம்.

ஒருமுறை இரண்டுமுறை மாத்திரம் அவர்களை மன்னிக்கும்படியல்ல; ஆனால், அவர்களுக்குத் தேவையிருக்கும் போதெல்லாம் தேவ இஷ்டப்பிரசாதத்தைப் பெறும்படி பாவசங்கீர்த்தனம் என்னும் தேவதிரவியஅனுமானத்தை நேசத்துடன் ஏற்படுத்தினோம். அவர்களுடையபாவங்களை நீரினாலல்ல, ஆனால், நமது சொந்தஇரத்தத்தால் கழுவும்படி அங்குநாம்அவர்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

நாளடைவிலே பலவழிகளில் நாம் எமதுநேசத்தை வெளிப்படுத்தியிருக்கிறோம். நமதுஇருதயத்தைக் காண்பித்து மனிதருடையஇரட்சிப்பை எவ்வளவாக நாம் விரும்புகிறோம் என்றும் அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம். அநேக ஆத்துமங்களுக்கு நமது இருதயப்பக்தி பெரும் ஒளியாயிருக்கின்றது. நமதுசேவைக்குஆத்துமங்களைக் கொண்டுவர விரும்பியவர்கள் இந்தப்பக்தியால் அனுகூலம் பெற்றிருக்கிறார்கள்.

இன்னும் அதிகமாக நாம் கேட்கிறோம். மனிதர் எமது நேசத்துக்குப் பதில்நேசம் காண்பித்தால்மாத்திரம் போதாது. மானிடர் நமதுஇரக்கத்தில் நம்பிக்கைகொள்ள வேண்டும். நமது நன்மைத்தனத்தில் இருந்து சகலத்தையும் எதிர்பார்க்கவேண்டும். மன்னிக்க நாம் தயாராயிருப்பதை அவர்கள் மறக்கவும்கூடாது; அதிலே சந்தேகிக்கவும் கூடாது என நாம்ஆசிக்கிறோம்.

நாம் உன்னுடைய கடவுள், சிநேகதேவன். நாம் உனதுதந்தை, அன்புடன் நேசிக்கும்தந்தை. கொடூரமாக நடத்துபவரல்ல. நமதுஇருதயம் அளவற்ற பரிசுத்ததனமுள்ளது, அளவற்ற ஞானமுள்ளது. மானிடரிற் பாக்கியத்தையும் பலவீனத்தையும் நன்குஅறிகின்றது. அளவற்ற இரக்கத்துடன் பாவிகள் மீது கனிவுகாண்பிக்கின்றது.

முதற்பாவம்செய்தபின் மன்னிப்புக்கோரித் தாழச்சியுடன் நம்மிடம் வரும் ஆத்துமங்களை நாம் நேசிக்கிறோம்........தங்கள் இரண்டாவதுபாவத்தை நினைத்து அவர்கள் அழுத பிற்பாடும் அவர்களைநேசிக்கிறோம். அவர்கள் திரும்பத்திரும்ப இவ்விதம் நடந்தபோதிலும், லட்சக்கணக்கானமுறை நடந்தபோதிலும்.... ....அவர்களைநாம் நேசிக்கிறோம். அவர்களை எப்பொழுதும் மன்னிக்கிறோம். நமதுஇரத்தத்தில் அவர்களைக்கழுவுகிறோம். முதலிலிருந்து கடைசிவரை அவர்களுடையகறைகளைத் துடைக்கிறோம்.

ஆத்துமங்கள்மேல் நாம்ஒருபோதும் சலிப்புக்கொள்ளமாட்டோம். அவர்கள் நமதுஇருதயத்தில் அடைக்கலம்தேடி வரவேண்டுமென நமதுஇருதயம் எப்பொழுதும்எதிர்பார்க்கிறது; ....... துன்பம் அதிகமாய்வந்தால் அவர்கள்அதிகமாய் நமது இருதயத்தை நாடவேண்டும்.

நல்லசுகத்துடன் இருக்கும் குழந்தைகளைவிட நோய்வாய்ப்பட்ட ஒருகுழந்தையைத் தகப்பன் அதிக கவனத்துடன் கண்காணிப்பதில்லையா? அதன் தேவைகள் அதிகரிப்பதற்கொப்பத் தகப்பனுடையகவனமும் அதிகரிக்கிறது. அதேபோல் நீதிமான்களைவிடப் பாவிகள்மேல் நமதுஇருதயம் அதிகஅனுதாபமும், இரக்கமும் காண்பிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிச் சந்தர்ப்பம்

மாந்தர்களின் களையிழந்த வதனங்களும், போர்ச்சேவகரின் நடமாட்டமும் பார்ப்பவர்மனதில் திகிலையும், ஒருவித விபரீதஉணர்ச்சியையும் எழுப்பின. கலகலப்பான அந்நகரத்தைப் பயமென்னும்மேகம் கவிந்துகொண்டிருந்தது. நடமாடுபவர்கள் ஒருவரோடொருவர் காதும்காதுமாய்ப் பேசிச்சென்றனர். அப்போது நகரவாயிலைஅடைந்து கடுகிநடந்தது இராசவீதிவழியாய் ஓர்உருவம். நல்ல வளர்த்தி, நடுத்தரவயது, பரந்தநெற்றி, கூரியமூக்கு, களங்கமற்றபார்வை, கழுத்தளவாக நறுக்கிவிடப்பட்ட கூந்தல், சிறந்த ஆடைஆபரணங்கள். ஆனால், சாந்தம்நிறைந்த அவர்முகத்தில் கவலையின்சின்னங்கள் கணத்திற்குக்கணம் தோன்றி மறைந்தன. போகப்போக அவர் தன்னையும்அறியாமல் வேகமாய்ச்சென்றார். அந்நகருக்கு அவர் புதியவரல்ல. அவருடைய செல்வத்தில் பாதிக்குமேல் அந்நகரத்தில்தான் இருந்தது. சான்ஹெட்ரின் என்னும் யூதசங்கத்தில் அவர் ஒருமுக்கியமானவர். அன்றுஏனோ அவருடையமனோநிலை புயல்கண்ட கடல்போல் கொந்தளித்துக்கொண்டிருந்தது. விடிந்தால் பண்டிகைக்கோலமாக விளங்கவேண்டியநகரம் அவருக்கு விபரீத தோற்றமளித்தது. வீதியிலுள்ள பிரபலகடையொன்றில் நுழைந்தார் சூசை.

* * *

திமெத்ரியுஸ் அந்நகரில் ஒருபிரபல பரிமளவியாபாரி. அவரிடம் சூசைக்கு நல்லபரிச்சயம்உண்டு. காரணம், பாலியத்திலே இருவரும்ஒன்றாய்க் கல்வி பயின்றமையே. சான்ஹெட்ரின் சங்க மண்டபத்திற்குச் செல்லவிருந்தசூசை, தன்மனப்புயலைத் தணிக்கும்நோக்கமாகத்தான் திமெத்ரியுசைநாடினார். யூதகுலத்தலைவர்கள் எழுபத்தொரு பேரில் ஒருவர்என்றமுறையில் சூசையைத் தக்கமேரைமரியாதையுடன் வரவேற்றுஉபசரித்தார் திமெத்ரியுஸ்.

"வியாபாரம்எப்படி திமெத்ரியுஸ்?"

"இந்தஇரண்டு வருஷமாகச்சுகமேயில்லை — யோர்தான்நதிக்கரையிலே அருளப்பர் தபசு, தபசு என்று சொல்லி எங்கள்வியாபாரத்திற்கு ஓரளவு உலைவைத்தார். யேசு என் கடையை மூடிவிட வழிபண்ணிவிட்டான். நல்லவேளையாக நீங்கள்எல்லாம் சேர்ந்து அவனைஒருவழியாக ஒழுங்குபண்ணிவிட்டீர்கள்."

"உனக்கென்ன அவர்மேல் அவ்வளவுதுவேஷம், திமெத்ரியுஸ்?"

"துவேஷம்கிவேஷம் ஒன்றுமில்லை. நல்ல மனுஷன்தான். ஆனால், தானுண்டு, தன்காரியமுண்டென்று இருக்கத்தெரியாது. நீங்களெல்லாம் இருக்கிறீர்கள், இவனுக்கென்ன வந்தது? தேவாலயத்தைப் பரிசுத்தப் படுத்துகிறாராம்! அன்று கோவில்பிரகாரத்தில் வியாபாரிகளையும், சனங்களையும் அடித்துவிரட்டினாரே; சனங்கள் எதிர்த்திருந்தால் பெரியகலகம் ஏற்பட்டிருக்காதா? பெரியவர் சிறியவர் என்று இல்லையா? குருக்களையும், நம் ஆசாரியர்களையும் இகழ்ந்து தூஷிக்கிறாரே; உரோமருக்குமுன் எவ்வளவு கேவலமாய் இருக்கிறதுநமக்கு?"

"அதிருக்கட்டும்; உன்வியாபாரம் குறைவதற்கும், அதற்கும் சம்பந்தமென்ன?"

"ஏன் சம்பந்தமில்லை? இந்தமரிய மதலேன் நல்லவாடிக்கைகாரி. என்னவோ சூழ்ச்சிசெய்து, அவளைத்தன் சிஷ்யை ஆக்கிக்கொண்டான். இவளைப்போல் இன்னும் எத்தனையோ கிராக்கிகள் கெட்டுப்போயின. அதிலிருந்து என்வியாபாரத்தில் மண்விழுந்தது. அதுதான்போகட்டும். என் வியாபாரம் பெரிதல்ல எனக்கு. நமது குலப்பெருமை, நமதுஒற்றுமை இவையெல்லாம் என்னஆகிறது? அவனை ஒழித்துக்கட்டுவதென்று பத்து நாளுக்குமுன்பே நீங்கள் அந்தரங்கமாக முடிவுசெய்திருக்கிறீர்களென்று அறிந்ததிலிருந்து எனக்குத் திருப்திதான்."

"திமெத்ரியுஸ்! அவர் ஒருமகான்; தீர்க்கதரிசி; ஒருவேளை மெசியாவாகவே இருக்கலாம்என்பது என்அபிப்பிராயம். அப்படியிருக்க அவரை ஒழித்துக்கட்ட நான் சம்மதித்தேனென்று நீ எப்படிநம்பினாய்?"

"அதென்ன, அப்படிச் சொல்லுகிறாய்? நீயும்அக்கூட்டத்தில் ஆஜராயிருந்ததாகக் கேள்விப்பட்டேன்?"

"வாஸ்தவம்தான். இப்பொழுது பண்டிகைக்கூட்டசமயத்தில் வேண்டாம், பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னதினால், நான்சும்மாவிருந்து விட்டேனேதவிர, அவர்களோடு ஒத்துப்பேசவில்லை. என் வீண்வம்புஎன்று தட்டியும்பேசவில்லை. அப்படி இருந்தும்கூடக் குற்றமாகத்தான் பட்டதுஎனக்கு. மெய்யாகவே அவர் ஓர்தீர்க்கதரிசி. உன்வியாபாரத்தைக் கெடுத்தாரேஎன்று உனக்கு அவர்மேல்கோபம்..."

"அப்படியில்லை......"

"சற்றுப்பொறு. மக்களுள் செல்வாக்குக் குறைந்துவருகிறதே. நம்மைச் சட்டைபண்ணுவார் யாரும் இல்லையே; யூதசமூகமே அவரைப் பின்செல்லுகிறதே; நம்மைப் பழித்துப்பேசிக் கேவலப்படுத்துகிறாரே என்றுதான் எங்களுக்குக்கோபம். யாருடையகோபம் எப்படியானாலும் காரியம்ஆகிறதென்ன? லாசர் இறந்துபோனானே. நீயாவது, நாங்களாவது

சிறுமலர் — ச. போ.

உயிர்ப்பிக்கமுடியுமா? மூன்றுநாளைக்குப்பின் அவரல்லவா உயிர்கொடுத்தார். தேவன் அவரோடுஇருக்கிறார் என்பதற்கு இதைவிட வேறுஎன்ன அத்தாட்சிவேண்டும்? அவர்செய்த புதுமைகளுக்குக் கணக்குண்டா? அவர்மேல் யாரால் என்ன குற்றம் சொல்லமுடியும்? நமது ஊழல்களை நாமறிவதற்கு மேலாகவே அறிந்து, பட்டவர்த்தனமாய்ப் பேசுகிறார் என்பதுதானே அவர்மேல்பகையை உண்டாக்குகிறது. அவரைப் பகைப்பதற்குப்பதில் நம்மைத்தானே திருத்திக் கொள்வதல்லவா நியாயம்?"

"பின்னர் ஏன்அவரைக்கொலைசெய்யத் தீர்ப்பளித்தீர்கள்?"

"யார் தீர்ப்பளித்தது? கொலைசெய்ய வழிதேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஒருசாரார் திருநாள் கூட்டத்தில் ஒன்றும்வேண்டாம், பிறகுபார்க்கலாம் என்றனர். அத்துடன் விட்டுவைத்திருக்கிறோம். மறுபடி பேச்சுஎழும்போது பார்த்துக் கொள்ளுகிறதுஎன்று நாங்கள் இருக்கிறோம்."

"சரிதான், நீங்கள் இப்பொழுதுதான் அரிமத்தியாவிலிருந்து வருகிறீர்களோ? காரியம் சட்டுப்புட்டென்று முடிந்தது உங்களுக்குத் தெரியாதென்று சொல்லுங்கள். கொலைக்குத் தீர்ப்பாகிவிட்டதே — இந்நேரம் சிலுவையில் தொங்கவேண்டுமே உமது தீர்க்கதரிசி! அடேஅதற்குள் இவ்வளவு இருட்டிவிட்டதே; மணிஎன்ன இப்பொழுது?"

இருவரும் வெளியேவந்தனர். போர்ச்சேவகரின் கூட்டம் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அவர்களின் தலைவனான செந்தூரியன், "மெய்யாகவே இந்தமனுஷன் நீதிமான்" என்று தன்சேவகரிடம் சொல்லிக்கொண்டு போனான். வீதியில்நடமாடிய சனங்களின்முகத்திலே பீதியும், கலவரமும்

(தொடர்ச்சி [illegible])

# தவிசிழந்த அரசர்கள்

I

இத்தாலிய அரசராகவர ஆசிக்கின்ற ஓர் மனிதர் தம்முடைய சிம்மாசனம் அதிகம்சமீபமாகத் தம்மைநோக்கி இயங்கிக்கொண்டிருக்கிறதா என்பதை அறிந்துகொள்ளுமாறு சென்ற இத்தாலியநகரசங்க தேர்தல்களின்போது அநேகதடவை ரோமைநகருடன் அதிகந்தூரமான தெலிபோன்மூலம் பேசிக்கொண்டிருந்தார். ஆம், அவரது சிம்மாசனம் அவரைநோக்கி இயங்கியதுதான். ஆனால், அது ஓர் சொற்பதூரம் மாத்திரமே. அவர் நாமம் உம்பெட்ரோ என்பது. அவர் 1946-ம்ஆண்டிலே 26 நாள் தமது சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். அப்போது இத்தாலிய மக்கள் முடியரசிலே களைகொண்டவர்களாய் இனி அதுதங்களுக்குப் போதுமென்று முடிவுகட்டி, அவரைச் சிம்மாசனத்திலிருந்துநீக்கி இரண்டேயிரண்டு உடுப்புப்பெட்டிகளுடன் அவரைவெளியேற்றி விட்டார்கள். அடுத்த வருடப்பாராளுமன்றத் தேர்தலிலே இத்தாலிய முடியரசுக்கட்சியினர் வெற்றியடைவார்களாயின், அரசர் தமது பிரஜைகள்மத்திக்குச் சென்று அவர்களை மீண்டும் ஆட்சிசெய்வதற்கான ஓர் சந்தர்ப்பம் கிட்டுவதாகும்.

II

## அல்பானிய சோகுமன்னர்

55 வயசுடையவரான இவரே முடியிழந்த அரசர்களிலெல்லாம் மிகநீண்டகாலமாகத் தேசாந்திரியாய் இருந்துவருகிறார். 1939-ம்ஆண்டு பெரிய வெள்ளிக்கிழமையன்று தமது நாட்டிலே முசோலினிபடையெடுத்தபோது இவர் ரூபலாவண்ணியமுள்ள தமது ஜெரால்டின் இராணியாருடனும், பட்டத்துக்குரிய இளவரசான குழந்தையுடனும் கிறீஸ்நாட்டுக்கு ஓடித்தப்பினார். பத்துலட்சம்பவுண் பெறுமதியான தங்கத்தைக் கைவசமுடையவரான சோகுஅரசர் இப்போது எகிப்தைச்சேர்ந்த அலெக்சான்டிறியாநகரில் ஆடம்பரமானவாழ்க்கை நடத்திவருகின்றார். ஓர் கொள்ளைக்காரப் பிரதானியின் மகனான இவர் நெறிதவறிய பலவந்தமுறையிலே அல்பானியாவின் அரசராகச் சிம்மாசனத்தைக் கைப்பற்றியிருந்தார்.

III

## ரூமேனிய மிக்கேல் மன்னர்

32 வயசுடையவரான இவர் 1947-ம் ஆண்டு ருஷிய அதிகாரபீடமாகிய கிறெம்லினால் சிம்மாசனத்தைத் துறக்கும்படியாகப் பலவந்தஞ்செய்யப்பெற்றார். தேசாந்திரியாய் இருந்துவருகின்ற அரசர்களிலெல்லாம் அதிகம் வறியவர்இவரே. 159 மாளிகைகள்உட்பட 20 லட்சம்பவுண் பெறுமதியான இவருக்கேயுரிய சொத்துகளையெல்லாம் ரூமேனிய கம்யூனிஸ்தஅரசாங்கம் அபகரித்துக் கொண்டது. இவர் தம் தேவியாருடன் சமீபத்தில் லோசேன்நகரிலும், இங்கிலாந்திலுமே சஞ்சரித்திருக்கின்றார். இங்கிலாந்திலே இவர் வசித்துவருகின்ற புதியமனை ஹோட்ஸ் எனுமிடத்தைச்சேர்ந்த அயொட் ஹவுஸ். இது புறெக்கெற் பிரபுவுக்குச் சொந்தமானது.

IV

## யூகோசிலேவிய பீற்றர்மன்னர்

28 வயசுடையவரான இவர் ஜெனிவாநகரிலே ஓர் சிறியமனையில் வாழ்ந்துவருகின்றார். முன்னர் கிறீஸ்நாட்டின் அலெக்சாண்டறா இளவரசியாயிருந்த தமது தேவியாரையும், அலெக்சான்டர்எனும் ஏழுவயசுப் புதல்வனையும் தாபரிக்கப்போதியபணம் இவரிடம் போதாப்படியாகவே இருக்கின்றது. தமது நாட்டின்மீது ஜேர்மனியர் படையெடுத்தபோது இவர் இங்கிலாந்துக்குத் தப்பியோடினார். தமது மாதாந்த செலவுபணமாகக் கொடுபட்டுவந்த 10,000 பவுணையும் மாஷல்ரிற்றோ நிறுத்தியபின் இவர் நியூயோக்நகரிலே மோட்டார்கார் விற்பனவுகாரராக வேலைசெய்துவந்தார்.

V

## பல்கேரிய சிமியோன் மன்னர்

14 வயசுடையவரானஇவர் தேசாந்திரிகளான அரசர்களில்அதிகம்இளவயசுள்ளவரும், சோகந்தரும் சம்பவத்தைக் கொண்டவருமாவர். தமது தந்தையாரான போறிஸ் மன்னரிடமாக இவர் சிம்மாசனமேறியபோது ஆறு வயசுமாத்திரமே உடையவராயிருந்தார். போறிஸ்மன்னர் 1943-ம்ஆண்டு ஹிற்லரைச் சந்தித்ததைத்தொடர்ந்து மாயமாக மரணமடையலாயினர். தற்போது சிமியோன் அரசரும், அவர் மாதாவான ஜொவான்னா இராணியும் ஸ்பெயினிலே பிராங்கோவின் விருந்தினராயிருந்து சம்பிரமமாக வாழ்ந்துவருகின்றார்கள்.

VI

## ரூமேனிய கரோல் மன்னர்

59 வயசுடையவரும், ரூமேனிய நாட்டு மாஜி மிக்கேல்மன்னரின் தந்தையுமான இவர் போர்த்துக்காலிலே எஸ்ரோறில் எனுமிடத்தில் தமது புத்தகங்களோடும், நாய்களோடும், முன்னர் மாக்தா லூப்பெஸ்குஎன அறியப்பட்ட ஹெலென் இளவரசியான தமது நாயகியோடும் அமைதியாக வாழ்க்கை நடத்திவருகின்றார்.

VII

## பெல்ஜிய லெயோப்போல்ட் மன்னர்

தமது புதல்வரான போடுயின் அரசருக்குச் சாதகமாக 1951-ம்ஆண்டு சிம்மாசனத்தைத்துறந்தவரும், 51 வயசுடையவருமான இவர் பெல்ஜியத்திலேயே தமது வாசஸ்தலத்தைக் கொண்டிருக்கின்றார். ஆனால், தற்சமயம் விடுமுறையிலே 37 வயசுடைய டேறெதி இளவரசியான தமது தேவியாருடன் தென்னமெரிக்காவில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவருகின்றார்.

—பம்பாய் நகரிலுள்ள கல்லூரிஒன்றில் கற்றுவந்த இராஜேந்திர வியாஸ் எனும்குருட்டுமாணவர் பம்பாய்ச்சர்வகலாசாலையின் பி. ஏ. பட்டபரீட்சையிலே இரண்டாம்வகுப்புக்குரிய கண்ணியவரிசையுடன் அரங்கேறியிருக்கின்றார். இனிமேல் இவர் அடுத்தபடியாகப் பரிஸ்றர் பரீட்சைக்கும், அதே காலத்திலேயே எம். ஏ. பரீட்சைக்கும் படிக்கப்போகின்றாராம்.

—பிரித்தானியிலே கிழக்குத்தேசங்களையும், குடியேற்றநாடுகளையும் சேர்ந்தவர்களாய் 12,437 மாணவர்கள் இருந்துவருகின்றார்கள். இவர்களில் இலங்கை மாணவர்கள் 400 பேரென்றும், இந்திய மாணவர்கள் 2,800 பேரென்றும், பாகிஸ்தான் மாணவர்கள் 900 பேரென்றும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களிலெல்லாம் ஏறக்குறைய அரைவாசிப்பேர் லண்டனிலும், 300 பேர் ஒக்ஸ்போட்டிலும், 433 பேர் கேம்பிறிட்ஜிலும் கற்றுவருகின்றார்கள்.

## நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். அந்தோனியார், அர்ச். சவேரியார் இவர்கள் பேரால் நான் கேட்ட மன்றாட்டுக்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. இதை நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

பே. யேம்ஸ்

கார்மேல்ரோட்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## தேர்தல்விசாரணை மனுக்கள்

பாராளுமன்றப் பொதுத்தேர்தல்களிலே பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பெற்றுள்ளவர்களில் பத்துப்பேரின் தேர்தல்கள் முறைகேடானவைகளென்று ஆட்சேபித்து அவற்றைத் தள்ளிவைக்குமாறு சென்ற வியாழக்கிழமைவரையில் சுப்பிறீங்கோட்டுக்கு விசாரணைமனுப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் மேலும் பத்துத்தேர்தல்களை ஆட்சேபித்து வேறும் பத்துமனுப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (1) சிலாபப் பிரதிநிதியான திரு. ஷெர்லி கோறியா—(2) நிவிற்றிக்கலைப் பிரதிநிதியான திரு. எச். வெரகம— (3) டெடிகமப் பிரதிநிதியும், பிரதமருமான திரு. டட்லி சேனநாயக — (4) அத்தனகலைப்பிரதிநிதியான திரு. எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக— (5) அவிசாவலைப் பிரதிநிதியான ஸ்ரீமதி குஸுமா குணவர்த்தன— (6) சாவகச்சேரிப் பிரதிநிதியான திரு. வி. குமாரசாமி—(7) காங்கேசன்துறைப் பிரதிநிதியான திரு. எஸ். நடேசன்—(8) கோப்பாய்ப் பிரதிநிதியான திரு. சி. வன்னியசிங்கம்—(9) யாழ்ப்பாணப் பிரதிநிதியும், கைத்தொழில்–கடற்தொழில் மந்திரியாருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்—(10) மூக்மலைப் பிரதிநிதியான திரு. சி. ஏ. தர்மபாலாஎன்பவர்களுக்கு மாறுகவே அவைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

## ஆசிரியையின் துறவறபதவி

மட்டக்களப்பு சம்மிக்கேல்கல்லூரி ஆசிரியைகளில் ஒருவராய் இருந்துவந்தவரான செல்வி கமலா லூர்த்ஸ்அவர்கள் உலகசெல்வங்களைத்துறந்து மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரிய கன்னிகாசபையிலே ஓர் கன்னியாஸ்திரீயாகச்சேரச் சென்றிருக்கின்றார். இவர் மலாய்நாட்டிலே ஆரம்பகல்விபயின்று கேம்பிறிட்ஜ் சீனியர் பரீட்சையில் அரங்கேறினார். பின்னர் அங்கிருந்து இந்தியாவுக்குச்சென்று திருச்சினாப்பளியிலுள்ள திருச்சிலுவைக் கல்லூரியில்படித்துச் சென்னை சர்வகலாசாலையின் பி. ஏ. பட்டபரீட்சையில் சித்தியடைந்தார். அதன்மேல் சென்னையிலுள்ள பிறெசிடெண்சி கல்லூரியில் 1947-ம்ஆண்டு எம். ஏ.; பி. எஸ்.சி. பட்டங்கள் பெற்றுக்கொண்டார். பின்னர் அதேவருடத்தில்தானே சம்மிக்கேல்கல்லூரியில் ஓர் ஆசிரியையாகிச் தாபரசாஸ்திரம், ஆங்கிலம், சமயபாடம் ஆதியன கற்பித்துவரலாயினர்.

## கட்சிகளின் ஆயத்தம்

பாராளுமன்றப் பொதுத்தேர்தல்கள் முடிவடைந்ததோடு ஒருசிலஅரசியற்கட்சிகள் இவ்வருடஇறுதியிலே நடைபெறவிருக்கின்ற நகரசங்கங்கள், பட்டினசங்கங்கள் ஆதியவற்றின் தேர்தல்கள்விஷயமாய் ஏலவேதானே கலந்தாலோசிக்கத் தொடங்கியிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தத்தேர்தல்களிலே எதிர்க்கட்சிகள்ஒரேமுகமாய்நின்று ஒவ்வோர்வட்டாரத்திலும் ஒரேஅபேட்சகரைத் தேர்தலுக்கு நிறுத்துவது பற்றி ஆலோசிக்குமாறு அக்கட்சிகளில் ஒன்று எதிர்க்கட்சிகளின் கூட்டம் ஒன்றை நடத்தும்விஷயமாய் ஏலவேதானே வேலைசெய்யத்தொடங்கிவிட்டதாக அறியக்கிடக்கிறது.

## மற்றோர் குளத்திருத்தம்

வடமத்திய மாகாணத்திலுள்ள மற்றோர்புராதன குளங்களில் ஒன்றாகிய படவீவாக்குளத்தைத் திருத்தவும், அதனைச்சூழவரவுள்ள காடுகளைவெட்டி நிலத்தைத் திப்புரவுசெய்யவும் கமத்தொழிற்பட்டாளம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. இக்குளம் நுவரைகளாவீவாப்பிரிவில் மிகப்பெரியது. பராக்கிரமவாகுவால் வெட்டப்பட்டது. இதனைத்திருத்தவேண்டுமென்று அரசாங்கம் தீர்மானஞ் செய்துள்ளது. அங்ஙனம் திருத்தப்படுமிடத்து, வடமத்திய, வட, கீழ்மாகாணங்கள் மூன்றிலும் 30,000 ஏக்கர் நெல்வயலை வேளாண்மைக்குள்ளாக்கலாம். இந்த வேலையையிட்டு மதவாச்சிக்கும், கெபிற்றிக் கொலேலாவுக்கும் ஊடாகப் படவீவாவுக்குச் செல்லுந்தெரு பழுது பார்க்கப்படுகின்றது.

## கலியாணப் பதிவுசலார்

அகிலஇலங்கைக் கலியாணப்பதிவு செய்யும் றெஜிஸ்திறார்மார் ஐக்கியசங்கம் உள்நாட்டு மந்திரியாருக்கு அப்போது செய்துகொண்டமனுவின்பேரிலே அவர்களுக்குக் கொடுபடும்சலார் இருமடங்காக்கப்படவிருக்கிறது. புதிய திட்டத்தின்கீழ் கலியாணப்பதிவுக்கு வரும் மாப்பிள்ளை பெண்பிள்ளை கோஷ்டியார் கொடுக்கும் 50 சதங்களைத்தவிர, அரசினர் முன்கொடுத்ததைப்போல் இருமடங்கு பணம்கொடுப்பர். றெஜிஸ்திறார்மார் தங்கள் கந்தோருக்குவெளியே பதியப்போகும் பொழுது அவர்களுக்குக் கொடுபடவேண்டியசலார் இருமடங்காக்க— அதாவது 5ரூபாவாக்கப்பட்டிருக்கிறது. மாலை 6 மணிக்கும், காலை 6 மணிக்குமிடையில் கந்தோருக்குவெளியே பதிவு செய்கிறதாயின் அவர்களுக்குக் கொடுபடவேண்டிய சலார் 20 ரூபாவிலிருந்து 30 ரூபாவாக்கப்பட்டிருக்கிறது.

## இடியேறு தாக்கிமரணம்

கல்முனைப் பகுதியைச்சேர்ந்த ஈரக்கமத்துக்குச் சமீபமான முதலைக்கல் எனுமிடத்திலே சென்ற சனிக்கிழமை ஏழுபேர்சேர்ந்து பாலைப்பழம் பிடுங்கச் சென்றபோது, எதிர்பாராதவிதமாக இடியேறுல்தாக்குண்டு, இருவர் அவ்விடத்திலேயே இறந்துவிட, வேறு ஐவர் காயமடைந்தனர். இந்தஐவரும் அவ்வேளை ஈரக்கமத்தைநோக்கிச் சென்றுகொண்டிருந்த கல்லோயாச்சபைக்குச்சேர்ந்த வான்ஒன்றில் கல்முனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கேஅபாயநிலைமையில் இருந்துவருகின்றனர். இறந்தஇருவரும் முகம்மது சயாத்துவாவா, பத்தம்மா என்பவர்கள்.

## ஞாபகநூல்நிலையம்

பிரபலசரிதாசிரியராய் விளங்கியிருந்து காலஞ்சென்ற வண. எஸ். ஜி. பெரேறு சுவாமியவர்களின் ஞாபகார்த்தமாகக்காலியிலுள்ள சென்ற் அலோஷியஸ் கல்லூரியிலே நவமாகஅமைக்கப்பெற்ற கீழைத்தேச நூல்நிலையத்தைச் சென்ற சனிக்கிழமையன்று டக்றர் அன்டிறேயாஸ் நெல் அவர்கள் பிரமுகர்கள்பலரும் திரளாகக் குழுமியிருந்த சமுகத்தில் திறந்துவைக்கலாயினர். அத்தருணம் அவர் பேசியபோது: காலஞ்சென்ற வண. பெறேரு சுவாமிகள் எனது பெரியநண்பரும், பெருமகனுமாவர்; நான் பலமுறைகளிலும் அவருடன் கருத்துவேறுபாடுடையராக வேண்டியிருந்தேன். ஆனால், ஒருபோதுமே சச்சரவுபட்டுக் கொள்ளவில்லை; எந்த ஒரு எழுத்தாளருக்கோ அன்றேல் மாணவனுக்கோ அவர் ஒருபோதுமே சத்துருவாய் இருந்ததில்லை; ஓர் நூல்நிலையமுறையிலே அவருடைய ஞாபகமானது, இக்கல்லூரியுடன் சம்பந்தப்பட்டிருப்பக் காண்பது சந்தோஷந்தருவதாகும்; காத்திரமிக்க விலையுயர்ந்த நூல்களை உபகரிப்பதாலே கல்லூரிப் பழையமாணவர்கள் இந்த நூல்நிலையவிஸ்தரிப்புக்குத்துணைச்செய்வார்களென நம்புகிறேனெனக்கூறினார். இதுவரை 10,000 ரூபா உபகரித்திருக்கின்றார்கள். இது சரித்திரசம்பந்தமாய் மிகஅபூர்வமான கையெழுத்துப்பிரதிகளை அடக்கியுள்ளது.

## கம்யூனிஸ்தர்களும் பண்டித நேருவும்

உலகெங்குமுள்ள கம்யூனிஸ்தர்களுக்கு-விசேஷமாக இந்தியகம்யூனிஸ்தர்களுக்குப்— பண்டித நேரு அவர்கள் கம்யூனிஸம்விஷயமாக இதுவரை பேசிவந்தவிதம் பெரிதும் ஆதரவுஅளிப்பதாய் இருந்துவந்தது. கம்யூனிஸ்தர்களிலே ஒருசிலர் தவறுதலாக நடந்துகொண்டபோதிலும் கம்யூனிஸதத்துவம் என்னவோ நல்லதத்துவந்தான் என்றதோரணையில் பண்டிதநேரு இதுவரை பேசிவந்தார். ஆனால், கடந்த சிலதினங்களாகக் கம்யூனிஸம் விஷயமாக அவர்கண்ணை இதுவரை மறைத்துவந்ததிரை சிறுகச்சிறுக விலகுவதாகத் தெரிகிறது.

டில்லிச்சட்டசபையிலே குடியரசுத் தலைவர் நிகழ்த்திய சொற்பொழிவைப்பற்றி நடந்தவிவாதத்துக்குப் பண்டித நேரு அளித்தபதிலிலிருந்து கம்யூனிஸ்தர்களின் சுயரூபத்தை அவர் இப்பொழுது நன்றாக அறிந்துகொண்டார் என்பது புலனாயிற்று. இந்தியகம்யூனிஸ்தர்கள் பிற்போக்காளர்கள், தேசபக்தியில்லாதவர்கள், உண்மையைத்திரித்து அல்லதுமாற்றிக் கூறுபவர்கள், மக்களின்நலனில் அக்கறைகொள்ளாமல் கட்சிநலனையே பேணுபவர்கள், ஜனநாயகபண்பு இல்லாதவர்கள் என்று பண்டிதநேரு கூறலாயினர். மேலும் அவர் பின்வருமாறு கம்யூனிஸ்தர்களின் போக்கைக் கண்டித்தார்.

"கம்யூனிஸ்தகட்சியினரின் இலட்சியங்கள் சிறப்பாகவிருந்தபோதிலும், அவர்களின் சிந்தனைகளும், வழிமுறைகளும், கூடாநட்பு முறைகளும் அவர்கள் உண்மையில் பிற்போக்காளர் என்பதைக் காட்டிவிடுகின்றன. உடனடியாகத் தங்கள்கட்சிக்குச் சிலவசதிகள் பெறுவதற்காகச் சந்தர்ப்பவாதிகளாக மாறிவிடுகின்றார்கள். பிற்போக்குக் கட்சியினருடன் பிணைந்து அதேபிற்போக்கில் தாங்களும் நடந்துகொள்ளுகின்றார்கள்.

"இந்தநாட்டின் பாதுகாப்பிலும், ஐக்கியத்திலும் கம்யூனிஸ்தர்களுக்குச் சிறிதும்நாட்டமில்லை. தங்கள்கட்சி வளருவதற்காகவேண்டிப் பயங்கரத்தையும், கொலைவழிகளையும், தேசம் சின்னபின்னப்படுவதையும்கூட அவர்கள் இடைவிடாது ஊக்கித்துவந்திருக்கின்றார்கள்.

"பாகிஸ்தானுடன் பெரியநெருக்கடி உருவானகாலத்திலே சுதந்தர இந்தியாவெங்கும் புதியஅரசாங்கத்தைக் கவிழ்க்கக் கம்யூனிஸ்தர்கள்திட்டமிட்டு வேலைசெய்துவந்தார்கள்.

"கம்யூனிஸ்தர்கள் தாங்கள் தேசபக்தர்கள்எனக் கூறுவது வெறுங்கபடநாடகம். 'குடியரசுத் தலைவரின் பேச்சானது இந்நாட்டு மக்கள்மீது செய்யப்பட்ட யுத்தபிரகடனம்' என்று கம்யூனிஸ்த தலைவர்கூறியது வடிகட்டிய முட்டாள்தனம்.

"இந்தநாட்டில் நாம் எதையெல்லாம் போற்றுகிறோமோ அவற்றையெல்லாம் அவர்கள் இழிவுபடுத்தி 'ருஷியாவைப்பார், சீனவைப்பார்' என்று விஷயத்தெளிவு இல்லாமல் பல்லவிபாடுகின்றார்கள்.

"ருஷியாவில் வேகமான முன்னேற்றத்தை ஆரம்பத்தில் தடைப்படுத்தியது உள்நாட்டு யுத்தநிலைமைதான். ஆனால், வேகமானமுன்னேற்றம் இந்தியாவுக்கு வேண்டுமெனச் சொல்லிக்கொண்டே இவர்கள், இங்குஉள்நாட்டு யுத்தநிலையில் கொண்டுபோய்விடக்கூடிய காரியங்களைத்தான் இடைவிடாமல் செய்துவருகின்றார்கள்.

"சீனவில் இலஞ்சமும், கள்ளமார்க்கெற்றும் அடியோடு ஒழிந்துவிட்டதாகப் பறைசாற்றப்பட்டது. ஆனால், ஊழல்கள் மிகக்கடுமையாக இருப்பதாகச் செய்திவந்து சமீபத்தில் சீனஅர

## பொழுதுபோக்கு

ஞாயிற்றுக்கிழமை வேலைசெய்வது பாவம்என்று சின்னமேரி தனது சின்னத்தம்பிக்கு விளங்கப்படுத்திக்கொண்டிருந்தாள்.

தம்பி— அப்படியானால் பொலிஸ்காரரைப்பற்றி என்ன சொல்லுறாய்? அவர்கள் ஞாயிற்றுக்கிழமை வேலைக்குப் போகவேணும் அல்லவா? அப்ப அவர்கள் மோட்சத்துக்குப் போகமாட்டார்களா?

மேரி— உள்ளபடியடாதம்பி அவர்கள் மோட்சம்போக மாட்டார்கள். ஏனெனில், அவர்கள் அங்கே வேண்டியதில்லை.

* * *

உபாத்தியாயர்— நல்லது வில்லி, நான் உனதுதகப்பனுருக்குப் 10 ரூபா கொடுத்தால் அவர் கிழமைதோறும் ஒவ்வொருரூபா வட்டி போட்டுக் கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். நான் அவருக்குப் 10 ரூபா கொடுத்தால் ஆறு கிழமையின்பின் எனக்குஅவர் வட்டியுடன் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டியிருப்பார்?

வில்லி— 10 ரூபாதான் சேர்.

உபாத்தி.— அப்போ உனக்குக் கணக்குத் தெரியாது.

வில்லி— அப்படியானால்சேர் எனது தகப்பனாரைப்பற்றி உங்களுக்கு நல்லாய்த் தெரியாது.

* * *

தகப்பன்— வில்லி! இன்றைக்குத் திகதிஎன்ன? சொல்.

வில்லி— (சிறிதுவேளை யோசித்துவிட்டு) பப்பா! நேற்று என்னதிகதியென்றுநீங்கள்சொல்லுங்கள்; அப்போ இன்றைக்கு என்ன திகதியென்று உடனேநான் சொல்லிவிடுகிறேன்.

* * *

உபாத்தியாயர்— சோமு, உனது றிப்போட்டை உன்தகப்பனிடம் கொண்டுபோய்க் காண்பித்தாயா?

சோமு— ஆம், சேர்.

உபாத்தி.— அவர் என்னசொன்னார்?

சோமு— உக்கிரகோபத்துடன் என்னைப்பார்த்துக் கழுதையே, பிசாசிடம்போ என்றார்.

உபாத்தி.— அப்போ, நீ என்ன செய்தாய்?

சோமு— இதோ உங்களிடம் ஓடோடியும் வந்திருக்கிறேன் சேர்.

* * *

தகப்பன்—வில்லி, நீ படிப்புமுடிந்து பாடசாலையைவிட்டு நீங்கியதும் என்ன உத்தியோகம் பார்க்கவிருக்கின்றாய்?

வில்லி—பப்பா, உங்களைப்போலப் பென்ஷன் எடுத்துவிட்டுக் காலையும் நீட்டிக்கொண்டு சுகமாயிருக்கும் ஓர் ஸ்றேஷன்மாஸ்றராக வேண்டுமென்று தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

---

சாங்கம் உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

"ருஷியாவில் நீப்பர்நதித் தேக்கம் கட்டத் தொடங்கியதும் எல்லோரும் அதை வரவேற்றுப் பேசினார்கள். இங்கு அதைப்போலப் பலதேக்கங்களை அமைத்துவருகையில் கண்டனங்களைக்குவிக்கிறார்கள்.

"நமது நாட்டுநிகழ்ச்சிகளை வேண்டுமென்றே திரித்துக்கூறிப் பொய்யான தகவல்களையும், கருத்துரைகளையும் ருஷியாவுக்கும், சீனவுக்கும், மறுதேசங்களின் கம்யூனிஸ்த கட்சிகளுக்கும் இந்தியகம்யூனிஸ்தர்கள் கொடுத்துவருகின்றார்கள்."

கம்யூனிஸம்பற்றிய விஷயங்களைப் பொறுத்தவரை பண்டிதநேருவின் கண்களை இதுவரை மறைத்துவைத்துவந்த மேகப்படலம் இப்பொழுது சிறுகச்சிறுக விலகுவதைத் தேசபக்தர்கள் அனைவரும் வரவேற்கின்றனர் என்பது சொல்லாமலே விளங் கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**ஆனிமாதம் 1952**

வெ 27 அ. எதிஸ்லாஸ் (வெ)
சனி 28 அ. இறெனேயுசப்பர் (சி)
ஞா 29 இஸ்பிரீத். ஆகமனத்தின் பின் 4-ம் ஞாயிறு— அப்போஸ்தலர்களான அ. இராயப்பர், சின்னப்பர்திருநாள் (சி)
திங் 30 அ. சின்னப்பர் (சி)

**ஆடிமாதம் 1952**

செ 1 கர்த். திருஇரத்தத்திருநாள் (சி)
புத 2 தேவமாதா எலிசபேத்தம்மாளை மினவிக்கொண்டதிருநாள் (வெ)
வி 3 அ. 2-ம் சிங்கராயர் (வெ)

சத்தியவேத

# பாதுகாவலன்

1952-ம் ஆண்டு
ஆனி மாதம் 26-ந் திகதி

## ஆடிமாதப் பத்திமுயற்சி

தேவகர்த்தரின் திருஇரத்தப் பத்திக்கு நேரப்பெற்றுள்ள ஆடிமாசத்திலே, அத்திரு இரத்தத் திருநாளாகிய ஆடி 1-ந்திகதியன்றே இப்பத்திமுயற்சியை அநுட்டிக்க—பிறரைக்கொண்டு அநுட்டிப்பிக்கப் பிரயாசிப்பதற்கு ஊக்கித்து முயலுவோமாக.

அநுதினமும் தேவன் ஆதரித்துவரும் கோடிக்கணக்கான ஆத்துமாக்களே அவருக்கு எதிராகக் கட்டிக்கொண்டுவரும் அக்கிரமங்கள்குறைந்துபோவதற்கு வேண்டும் விசேஷ தேவானுக்கிரகத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தினம் தினம் காலைமாலை தேவஉதிரத்தைத் தேவபிதாவுக்கு ஒப்புக்கொடுத்துப் பிரார்த்தனைசெய்வது மகாசித்திகரமான ஓர் உபாயம். உற்ற சமயத்தில் தேவஉதவியைப் பெற்றுக்கொள்ள மாதாவழியாக மகனுரின் இரத்தத்தை நித்திய பிதாவுக்கு ஒப்புக்கொடுத்து மன்றாடுவது மகானுகூலமான வழிஎன்பதை மனத்தின்கண் இருத்திக்கொள்வோமாக.

"கூரேதார்ஸ்" எனவும்படும் அர்ச். வியான்னிநாதர் தமது ஞானயக்களைநோக்கி: என்பிள்ளைகளே! நான்சொல்வதை நன்றாகக்கவனியுங்கள்; எவ்வெப்போது நான் ஏதாவது தேவ அருளைப் பெற்றுக்கொண்டேனே அவ்வப்போதெல்லாம் யேசுநாதசுவாமியின் விலையேறப்பெற்ற திரு உதிரத்தைத் தேவதாயார்வழியாக நித்திய பிதாவுக்கு ஒப்புக்கொடுப்பித்து மன்றாடியே பெற்றுக்கொண்டேன்; பூசைவேளையே. எழுந்தேற்றநேரமே இந்தமன்றாட்டுக்கு மகாவாய்ப்பான் ஓர் சமயமாகும்; தேவதாயாரைச் சங்கித்து மகிமைப்படுத்துவதைக் குறித்து டோமினிக் எனவும்படும் அர்ச். சாமிநாதர் பிரசங்கித்துக்கொண்டு நின்றவோர் தருணத்திலே. அவரது பிரசங்கத்தைக் கவனமாகச் செவிகொடுத்துக் கேட்டிருந்த விசுவாசிகள்மீது தேவதாயார்தாமே தமது திருக்குமாரனின் திரு உதிரத்தைத் தெளித்தருளினர்; இந்த அர்ச்சியசிஷ்டர்தாமே பூசைசெய்து திருப்பாத்திரத்தை எழுந்தேற்றம்செய்யும் வேளையிலே தேவதாயார் தமது திவ்வியகுமாரனின் திருஇரத்தத்தைச் சமூகமாயிருந்த விசுவாசிகள்மீது ஊற்றுவதை இராசாவும் இராணியும் உட்பட முந்நூறுவிசுவாசிகள் கண்ணாரக்கண்டார்கள் என்று இந்த அர்ச்சியசிஷ்டரின் சீவியசரிதையிற் சொல்லப்பட்டிருக்கின்றது; 'எனது இரத்தத்தின்மூலமாக எனதுபிதாவின் நீதிக்கோபத்தின்மேல் செயங்கொள்ளுகின்றேன்; மனிதனைச் சருவேசுரனுடன் சமாதானப்படுத்திவிடுகிறேன்' என்று திவ்வியகர்த்தர்தாமே அர்ச். மெத்தில்தம்மாளுக்கு வெளிப்படுத்தியருளினர் என்றார். உத்தரிப்புஸ்தல ஆத்துமாஒன்று என்றி சூசோஎன்னும் சுத்தவாளருக்குக் காணப்பட்டு: நாங்கள் வேதனைதணிந்து ஆறுதல் அடைய இரத்தந்தான்—இரத்தந்தான்தேவை; சகோதரனே! நாங்கள் ஒருவருக்கொருவர் வாக்கிட்டபடி பூசைகள்தான் தேவை என்று சொல்லிற்றும்.

பரிசுத்த தேவதாயாரே! உமது திருக்குமாரனின் திவ்விய உதிரத்தை நித்தியபிதாவுக்கு ஒப்புக்கொடுத்து என் கருத்துகளுக்காக மன்றாடியருளும்.

நித்தியபிதாவே! என்பாவங்களுக்குப் பரிகாரமாகவும், உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களுக்காகவும், திருச்சபையின் அவசியங்களுக்காகவும், யேசுக்கிறீஸ்துநாதரின் விலையேறப்பெற்ற இரத்தத்தைத் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

## இஸ்பிரீ. ஆகமனத்தின் பின் 4-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு
(லூக். 5:1—11)

அக்காலத்தில் சனங்கள் சர்வேசுரனுடைய வாக்கியத்தைக் கேட்பதற்கு யேசுநாதரிடத்தில் நெருங்கிவந்தபோது, அவர் ஜெனசரேத் என்னும் ஏரியின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்தார். அப்போது ஏரிக் கரையோரத்தில் இருந்த இரண்டு தோணிகளைக் கண்டார். மீன்பிடிக்கிறவர்களோ அவைகளினின்று இறங்கி வலைகளை அலசிக்கொண்டிருந்தார்கள். ஆனல், அவைகளில் ஒன்றாகிய சீமோனுடைய தோணியில் அவர் ஏறிக்கொண்டு கரைக்குச் சற்றுத்தூரத்தில் தள்ள அவரைக் கேட்டுக்கொண்டார். பின்பு அவர் உட்கார்ந்து, தோணியிலிருந்து சனங்களுக்குப் போதித்தார். அவர் போதித்துமுடிந்தபின் சீமோனைநோக்கி: தோணியை ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோ; மீன்பிடிக்க உங்கள்வலைகளைப் போடுங்கள் என்றார். சீமோன் அவருக்கு மறுமொழியாக: போதகரே, இராவெல்லாம் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும், உமது வார்த்தையின்படியே வலையை வீசுவேன் என்றார். அப்படியே அவர்கள் செய்தபோது, ஏராளமான மச்சங்களை வளைத்துப்பிடித்தார்கள். அவர்களுடையவலையோ அறுந்துபோகிறதாயிருந்தது. அப்போது தங்களுக்கு உதவிசெய்யவரும்பொருட்டு வேறு தோணியில்இருந்த கூட்டாளிகளுக்குச் சயிக்கினைகாட்டினர்கள். அவர்களும்வந்து இரண்டு படகுகளையும் நிரப்பவே, இரண்டும் அமிழ்ந்துபோகிற தருவாயிலிருந்தன. இதைக்கண்டு சீமோன் இராயப்பர் யேசுநாதருடைய பாதங்களில்வீழ்ந்து: ஆண்டவரே, நான் பாவியான மனிதன். ஆகையால், என்னை விட்டு அகன்றுபோம் என்றார். ஏனெனில், அவரும் அவரோடு இருந்தசகலரும் தாங்கள் பிடித்த மீன்கள்திரளின் நிமித்தம் மிகுந்தபிரமிப்பு அடைந்திருந்தார்கள். சீமோனுடைய கூட்டாளிகளாயிருந்த செபதேயின் குமாரராகிய யாகப்பரும், அருளப்பரும் அவ்விதமே பிரமித்துக்கொண்டிருந்தார்கள். யேசுநாதர் சீமோனைநோக்கி: நீ பயப்படவேண்டாம; இதுமுதல் நீ மனிதரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். அவர்கள் தோணிகளைக் கரையிற்சேர்த்தபின் எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின்சென்றார்கள்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## "டேமியன் பாதிரியாரின்" திருப்பணி

(சென்றவாரத் தொடர்ச்சி)

இவர் செய்தசேவையில் முக்கியமானது, குஷ்டரோகிகளின் உள்ளத்தில் ஒரு நம்பிக்கையை உண்டாக்கிவிட்டதே. இதுவே இவர்செய்தபெரியவேலை. அவர்கள் எப்பொழுதும் தங்கள்மனதை ஏதாவது ஒருவேலையில் ஈடுபடச்செய்துவந்தார். அவர்கள் எப்போதும் சந்தோஷமாய் இருக்க முயல்வதோடு, தங்களுக்காக அனுதாபப்படும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை அவர்களுக்கு உபதேசித்தார்.

குஷ்டரோகிகளுள் தன்னை ஒருவராய்க் கருதினவரைக் குஷ்டரோகம் பிடித்ததென்றால் அதிசயப்படத் தேவையில்லை. ஒருநாள் அவரின் காலில் வெந்நீர்பட்டது. வெந்நீர்பட்டஇடத்தில் தோல் கொப்புளித்து விட்டதொழிய அவருக்கு ஒரு விதமான வேதனையுமுண்டாகவில்லை. உடனே சுவாமியார் தனக்கும் குஷ்டரோகம்வந்துவிட்டதென அறிந்தார். இதனல் இவர் கலங்கவில்லை. பதைபதைக்கவில்லை. மனந்தளரவில்லை. ஆனல், தனக்குப்பின் இந்தஇடத்தில் யார்ஊழியம் செய்வார்களென்ற கவலைதான் இவர் மனதில் குடிகொண்டது.

வியாதி முற்றிக்கொண்டு வந்தது. தமியான் சுவாமியார் ஒரேபடுக்கையானர். அங்கு இருந்த குஷ்டரோகிகள் அனைவரும் கண்ணீர்சிந்தியவண்ணம் நின்றனர். தான்செத்ததும் தனது உடலைத்தான் மோலாக்காய் தீவிற்கு வந்தபோது வீடில்லாமல் வசித்துவந்த அந்தமரத்தடியில் அடக்கம்பண்ணும்படி சொன்னர். 1889-ம் வருடம் தான்உலகத்திற்கு எதற்காக உதித்தாரோ அந்தநோக்கத்தை நிறைவேற்றி ஆண்டவரின் சந்நிதானத்திற் போய்ச்சேர்ந்தார்.

தமியான்சுவாமியாரின் வேலையை உலகம்அறிந்தது. இவரின் ஊழியம் தொடர்ந்தேசித்தியாய் நடைபெறச் சங்கங்கள்உண்டாக்கப்பட்டன. பணம்உலகத்தின் பலபாகங்களிலுமிருந்து திரட்டப்பட்டது. இன்றும் இவ்வூழியம் நடைபெற்றுவருகிறது. உலகத்தில் வேறு பலபாகங்களிலும் இவ்வூழியம் நடைபெற்று வருகிறது. அனேகர் இவ்வரிய சேவையில் ஈடுபெறச் சந்தோஷத்துடன் முன்வருகின்றனர்.

இத்திடமுள்ள தியாகியின் சீவியம் எம்மைக் கிறிஸ்தவசேவை புரியத் தூண்டுகிறது. இக்கிறிஸ்தவ அன்பனின் ஒப்பற்ற சாட்சி எம்மை மேன்மேலும் நம்நாதரின் சேவையில் ஈடுபடச்செய்யட்டும். கிறிஸ்துவின் சேவையே தன் சீவியத்தின் இலக்காகமதித்த இவரின் அரிய திருப்பணியை நாம் என்றும் பின்பற்றுவோம்.

## அர்ச். பிரான்சீஸ் சவேரியாரும் மன்னரும்

இலங்கையிலே சத்தியவேதத்தைப் பரப்பவரும்படி வண. வில்லாகொண்டே அருளப்பர் சுவாமியார் மணப்பாட்டிலிருந்த அர்ச். சவேரியாருக்கு ஒரு கடிதம் அனுப்பினர். அர்ச். சவேரியாரும் தாமதமின்றி அந்நாளில் பரதர் வைத்திருந்த பத்துஅல்லது பதினைந்துதொன் தாங்கக்கூடிய தோணியில்ஏறி 125 மைல் தூரமுள்ள மன்னர்க்குடாக்கடலைக் கடந்துவந்தார். மன்னர்வாசிகளின் தூதுக்கோஷ்டிக்குத் திருவிதாங்கூரிலே தாம்கொடுத்த வாக்குப்பிரகாரம் 1545-ம்வருஷம் சித்திரை மாதம் மன்னருக்குத் தரிசனை கொடுத்தார். மன்னர் பயங்கரமான கொள்ளைநோயினல் பீடிக்கப்பட்டு நாள்வீதம் நூற்றுவருக்கு மேற்பட்டோர் மரணத்துக்கு இரையாகிவந்தனர். அவர் மன்னரை அடைந்ததும் தற்காலம் தோட்டவெளி என வழங்கப்படுகின்ற பாஸிம்என்ற இடத்திற்குப்போய் வேதசாட்சிகளால் அர்ச்சிக்கப்பட்ட அப்பூமியை முத்திசெய்தார். அச்சமயம் இத்தீவில் கொள்ளைநோய் காணப்பட்டது. இந்தஉத்தமர் தோட்டவெளிக்கு வந்திருப்பதைக் கேள்விப்பட்ட மன்னர் வாசிகளுள் பலபாகங்களிலுமிருந்து ஏறக்குறைய மூவாயிரம் பேர் அவரைஅண்டி, அழுது மன்றாடிச் சனங்களை அந்தநோயினின்றும் காப்பாற்றும்படி கேட்டுக்கொண்டனர்.

அவர்களில் பெரும்பாலார் பிறமதத்தினர். அப்போது அர்ச்.சவேரியார்தமக்கு மூன்று நாட்தவணை தரும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டார். அவர் தனிமையான ஓர் இடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குச்சென்று தோட்டவெளியில் வேதத்திற்காகஉயிர்துறந்த புண்ணியவான்களின் உதிரத்தைச் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுத்துச் செபம்செய்துவந்தார். மூன்றாம்நாள் பயங்கரமான அக்கொள்ளைநோய் அகன்று, நோய்வாய்ப்பட்டவர்களும் சொஸ்தமடைந்தார்கள். அநேகர் ஞானஸ்நானம்பெறவும் விரும்பினார்கள். அர்ச். சவேரியார் தமது கரத்தாலேயே அவர்களுக்கு ஞானஸ்நானம்கொடுத்து ஆறுதலடைந்தார். அங்கே தாமதித்திருக்க முடியாமையால் பிரான்சீஸ்கன் சபையைச்சேர்ந்த வண. இம்மானுவேல் சுவாமியாரைப் புதிய கிறீஸ்தவர்களுக்குப் பாதுகாவலாகவைத்தார். முந்தியவர்களைப்போலவே புதியகிறீஸ்தவர்களுக்கும்ஆபத்துவருமெனப் பயந்து யாழ்ப்பாணத்திலிருந்த செகராசசேகர அரசனைப் போய்க் காணத் துணிந்தார். போகும்வழியில் அர்ச். சவேரியார், நெடுந்தீவில் ஓர் மகமதியரின் இறந்துபோன பிள்ளைக்கு உயிர்கொடுத்தாகச் சொல்லப்படுகிறது.

யாழ்ப்பாண அரசனான செகராசசேகரன் தனது கர்வத்தை அடக்கிக்கொண்டான். தான் மன்னார்க் கிறிஸ்தவர்களை வதைத்துக்கொன்றதைக் கேள்விப்பட்ட போர்த்துக்கால்தேச அரசன் சிம்மாசனத்தைவிட்டுத் தன்னை அகற்றி, மன்னார்க் கிறிஸ்தவர்களைச் சங்காரஞ் செய்ததற்கேற்பத் தன்னைத் தண்டிக்கும்படி புதியஇராசப் பிரதிநிதியாகிய ஜோவான் திகாஸ்த்ரோ என்பவருக்குஉத்தரவிட்டிருப்பதையறிந்து மிகவும் பயந்திருந்தான். அர்ச். சவேரியாரை அன்போடுவரவேற்று அவர் விரும்பியதெல்லாம் செய்வதாக ஒப்புக்கொண்டான். ஆனால், இத்துஷ்டனின் வாக்கில் அவர் நம்பிக்கைவைக்கவில்லை. அதற்கத்தாட்சியாய், இத்தீவின் துறைமுகத்தைவிட்டுப் போகையில், தாம்விட்டுப் பிரியும் கடற்கரையைநோக்கி, "ஓ! துர்ப்பாக்கிய தீவே! எத்தனையோ மாண்டசரீரங்கள் உன்கரையைமூடும்! எவ்வளவோ இரத்தம் உன்னில்பெருகி ஓடும்" எனத் தீர்க்கதரிசனமாய் வசனத்தார். இவைகளெல்தாம் சரித்திரவாயிலாக அறிந்தசம்பவங்கள். நிற்க,

அர்ச். பிரான்சீஸ் சவேரியார் பரமபதம்அடைந்த நான்காம் நூற்றாண்டுவிழா தோட்டவெளியிலே அடுத்துநிகழும் ஆடிமாதம் 13-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவிருப்பது சாலவும் பொருத்தமானதே. ஆதலால் இதிலே அவர் பக்தர்கள் மனோற்சாகமாகப் பங்குபற்றுவார்களெனக் காத்திருக்கலாம்.

"ஓர் பக்தன்"

சம்பாதியுங்கள்

முதல் இல்லாமலே உங்கள் ஓய்வான நேரங்களில் மாதம் ஒன்றுக்கு 100 ரூபா முதல் 300 ரூபா வரையில் சம்பாதியுங்கள். விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

Girson Knitting Works,
Ludhiana.

## திருமண வைபவம்

வவுனியா, இறம்பைக்குளவாசரும், பிரசித்தநொத்தாரிசுமான திரு. கே. பேதுருப்பிள்ளை அவர்களின்புத்திரரும், கல்விப்பகுதியில் உத்தியோககடமை பார்த்து வருகிறவருமான திருவளர் செல்வன் பி. செபஸ்தியாம்பிள்ளைக்கும் சுண்டிக்குளிவாசராயிருந்து பலராலும் நன்கறியப்பெற்றவரான திரு. எஸ். எஸ். மனுவேற்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரியும், பிரபலவியாபாரியாராய் விளங்கியிருந்த திரு. எஸ். சூசைப்பிள்ளை அவர்களின் பௌத்திரியுமான திருவளர்செல்வி மேரிதெரேசா மனோன்மணிக்கும் சென்ற 21-ந்திகதி சனிக்கிழமைகாலை சுண்டிக்குளி, சஞ்சுவாம்கோவிலிலே இனசனர், சிநேகிதர் முதலானோர் திரளாகக் கூடியிருந்த சமுகத்திலே அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை மனேஜரான வண. எவ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ் சுவாமியவர்களால் மெய்விவாகத்திருச்சடங்கு சுபகரமாக நிறைவேறியது. அத்தருணம் சுவாமியவர்கள் திருமணம் என்னும் தேவதிரவிய அனுமானத்தைப்பற்றி அரியதோர் பிரசங்கம் செய்து புதிய தம்பதிகளுக்கு ஆசிகூறி நின்றார். அதன்மேல் மணமக்கள் எஸ். ஸ்ரனிஸ்லாஸ் தம்பதிகளால் புஷ்பாரங்கள் சூட்டப்பெற்று அங்கு சமுகமானோர் புடைசூழ வாத்தியவரிசைகளுடன் வீதியுலாப்போந்து மணமகள் மன்றல்மனைசேர்ந்து மங்கலகரமாக வரவேற்றுபசரிக்கப் பெற்றார்கள். அத்தருணம் திரு. ஏ. பி. தம்பையா அவர்கள் புதுமணத்தம்பதிகளின் குடும்ப வரலாறுகளை எடுத்துக்காட்டிச் சோபனங் கூறலாயினர். இப்புதிய குடும்பமானது அஷ்ட ஐஸ்வரியங்களும் பெற்று இனிதேவாழ இறைவன் திருவருளை வேண்டுகின்றோம்.

புத்தக மதிப்புரை

## "பயிலுந் தமிழ்"

"பயிலுந் தமிழ்" என்னும்நூலின் முதலாம்பாகம் வரப்பெற்றோம். தமிழ்ப் பாஷையைப் பயிலுவதற்காக இக்காலத்தில் பலநூல்கள் பலராலும் எழுதப்பட்டிருந்தாலும் இதிலே சில விசேடஅம்சங்கள் பொருந்தியிருப்பது போற்றத்தக்கதாகும். சிறந்த ஆங்கில பாஷைப் புஸ்தகங்களைப்போல, அம்சங்களை ஆராய்ந்தெடுத்து, முறைப்படுத்தி, சிறந்தவைப்புமுறையில்வகுத்து இந்நூல் தொகுக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்ப்பாஷையில் அதிகமாகப் பயின்றுவருகின்ற சொற்களையும், சொற்றொடர்களையும் அவற்றின் அர்த்தங்களையும், பிரயோகங்களையும் தெளிவுபடுத்தி, விளங்கவைத்திருப்பதால் இதனைப்படிப்பவர்கள் பிழையின்றிஎழுதவும், பேசவும்கூடிய ஆற்றலைஅடைவார்கள் என்பதில்ஐயமில்லை.

பழமையும் வளமுமுடைய தமிழ்ப்பாஷையிலும் மரபுச்சொற்றொடர்களும், உவமை, பழமொழி முதலானவைகளும் ஏராளமாக இருக்கின்றனவென்பதை இதனைக் கற்பவர்கள் அறிந்துகொள்வதுமன்றிப் பொருட்செறிவுடைய வசனங்களை எழுதவும், கேட்டார்ப்பிணிக்கும் வகையாகப் பேசவும் கூடியவராவார்.

இந்தமுதலாம்பாகம் எழுத்துப் பயிற்சி, சொற்பயிற்சி, சொற்றொடர்ப் பயிற்சியென மூன்றுபாகங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொருபாகத்திலுமுள்ள ஒவ்வொருஅம்சத்துக்கும் விளக்கம், எடுத்துக்காட்டு, பயிற்சிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாகத்தின் முடிவிலும் மாதிரி வினாக்களும், மாதிரிவிடைகளும் காட்டப்பட்டிருக்கின்றன. ஈற்றில் பரீட்சை வினாக்கள் எனப் பத்துப்பயிற்சிகள் உண்டு.

இந்நூல், மாணவர்களை வழிநடத்தி முறையாகவும், திறமையாகவும தமிழ்ப் பாஷையைப் பயிற்றுவதற்கு ஏற்ற சிறந்தஒருநூல் இல்லை என்றிருக்கிற ஆசிரியருக்கு ஒருஅரியதுணையாக இருக்கும்என்பது திண்ணம்.

இஃது தமிழ்ப்பாஷையில் மேற்றர மாணவர்கள் ஆசிரியர் உதவியின்றித் தேர்ச்சியுறவும், பரீட்சையில் சித்தி பெறவும் செய்யக்கூடிய ஓர் சிறந்த நூலாகும். கனிஷ்ட, சிரேஷ்டவகுப்புப் பரீட்சைகளிலே இக்காலத்தில் பரீட்சிக்கப்படும் தமிழ்ப்பாஷைவினாக்களுக்குத் திட்டமாகவிடையளிக்கஉதவக்கூடியது என்பது நமதுதிடமான நம்பிக்கை.

முத்துப்போன்ற தெளிவானஎழுத்தில், உயர்ந்த வெள்ளைக்கடதாசியில் அழகானஅட்டையுடன் இந்தஅருமையானநூலை ஆக்கிக்கொடுத்தது தமிழன்னைக்குச் செய்த ஒருசிறந்த தொண்டாகும். இந்நூலின் இரண்டாம்பாகத்தையும் கூடியவிரைவில் வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். எமக்கு அனுப்பிய பிரதிக்காக எமது நன்றி உரித்தாகுக!

பிரதிவிலை ரூபா **1-75**
கிடைக்குமிடம்:

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
யாழ்ப்பாணம்



புல்லாவெளி

## அர்ச். செபஸ்தியார் திருநாள்

இத்திருநாள் வழமைபோல ஆடி மீ 8-ந் திகதி கொண்டாடப்படும். ஆனி மீ 29-ந் திகதி கொடியேற்றத்துடன் நோவனைகள் ஆரம்பமாகி நடைபெறும்.

ஆடி மீ 5-ந் திகதி ஞானவொடுக்க போதகர் திரிதின ஞானவொடுக்கத்தை ஆரம்பிப்பார்.

6-ந் திகதி மாலையாராதனையின்பின் 11 மணிக்கு திருமணித்தியாலம். 12 மணிக்கு நடுச்சாமப் பூசை நடைபெறும்.

7-ந் திகதி பிற்பகல் 5 மணிக்கு திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், மாலை ஆராதனை.

8-ந் திகதி முற்பகல் 4 மணி தொடக்கம் திவ்விய பூசைப் பலிகள் நடைபெறும். 7 மணிக்குத் திருநாள் பாடற்பூசை.

ஆன்ம காரியங்களைக் கவனிக்கக் குருமார் சமுகமாயிருப்பார்கள்.

யாத்திரிகர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்படும்.

கட்டளைக்குரவர்.

## கம்யூனிஸம் சொல்வதென்ன?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்துக் குழந்தைகளுக்கு ஊனம்செய்ய வேண்டாம்என்று பெற்றோருக்குப் போதிக்க வேண்டும்." 1949-இல் வேறொரு கம்யூனிஸ்த வெளியீடு: "மதத்துக்கடுத்த அற்பசொற்ப ஆசாரமும் கம்யூனிஸ்தர்கள் இடையே தலைகாட்டக்கூடாது." 1947-ம் ஆண்டுஐப்பசியிலே வாலர்கள் பிராவ்டா என்றபத்திரிகை, "கடவுள் இருக்கிறார்என்று கம்யூனிஸ்தவாலர்கள் நம்புவதென்பது கூடாதகாரியம்."

கம்யூனிஸ்தநாடுகளில் ஆரம்பப் பாடசாலையிலிருந்தே மதம் இல்லையென்றும், கடவுள் இல்லையென்றும் போதித்துவருகிறார்கள். ஒகோ, மதத்தையும், தெய்வ பக்தியையும் புதைத்துவிட்டுமனிதரின் இலட்சணத்தை

வீட்டுத்தொழில்

ஆசிரியர் தேவை

தமிழ் S. S. C. பரீட்சையில் ஆங்கேறி, "கூடைபின்னுதல்" (Basket Weaving) பாடத்தில் 5-ம் பருவம் சித்தியடைந்த வீட்டுத்தொழில் ஆசிரியர் (Home Occupation Teacher) ஆண், பெண் இருபாலாருந் தேவை. விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பம் அனுப்பவும்.

**T. A. J. Mathuranayagam,**
*Gen. Manager, R. C. Schools.*
Jaffna 23-6-52

உயர்த்தப்போகிறதா கம்யூனிஸம்?

கடவுளை நிராகரிப்பவன் இடத்தில் ஒழுக்கம் மருந்துக்கும் கிடைக்குமா? கடவுள்வகுத்தது தானேஒழுக்கம். கடவுள் வேண்டாம்என்றால்........ கம்யூனிஸத்தின் வழிவகைகளில் எல்லாம் பொய்யும் புனைசுருட்டும் வஞ்சகமுமாம். தில்லுமுல்லு, பொம்மலாட்டம், சோரம், கொள்ளை, கொலை. சபையின் அங்கத்தினன் என்றமுறையிலோ, ஆள் என்ற தனிப்பட்டமுறையிலோ, அதர்மம்தான் அவர்கள் நடத்தை.

எங்கல்ஸ் என்னஎழுதினான்?: "லோகாதாயம்என்ற கம்யூனிஸத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் நித்தியசத்தியம் என்பதெல்லாம் கிடையாது. சத்தியம் அசத்தியம், நன்மைதீமைஎன்ற வித்தியாசம்கிடையாது. இவை நிலவரமானவைஅல்ல. சமயத்துக்கேற்றதுபோலப் பாவிக்கப்படும்."

(தொடரும்)

இரத்தம் வடித்த லீலி

அர்ச். மரியகோறெற்றி
ஓரங்க நாடகம்
நவமாக வெளிவந்திருக்கிறது.
பிரதிவிலை சதம் **75** தபாற்கூலிவேறு

இரத்தம் வடித்தலீலிக்குப்
பாமாலை
பிரதி சதம் **15.** கிடைக்குமிடம்:
பாப்பரசர் குருமடம், கண்டி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடைசிச் சந்தர்ப்பம்

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

குடிகொண்டிருந்தன. ஏதோபெரிய கண்ணறாவியைக்கண்டு சகியாதவர்கள் போல் தங்கள்மார்பில் அறைந்து கொண்டு சென்றார்கள். இதைக்கண்ணுற்றசூசை "ஜெருசலேமே! ஜெருசலேமே! தீர்க்கதரிசிகளையும், உன்னிடம் அனுப்பப்பட்டவர்களையும் கொலைசெய்து நிர்மூலம்பண்ணுகிறாயே; உன்னுடைய இரட்சணியத்தின்நாளை நீ அறியவில்லையே; ஐயோ, ஜெருசலேமே!.." சூசை இருள்சூழ்ந்த வீதியில் ஓடிமறைந்தார்.

* * *

மனிதசஞ்சாரமற்ற குன்றின்உச்சி. சோகமேஉருவான மூன்றுபெண்கள். அவர்கள் அருகாமையில் துக்கத்தினால் சோர்ந்த ஆணுருவம். இருளில்நிலவிய மரணமவுனம். இரத்தத்துகில் காற்றில்மிதந்தது. கீழே தூரத்தில் இரண்டு உருவங்கள் கையில்பந்தத்துடன் இரண்டுஏவலாட்கள் பின்தொடரக் கரடுமுரடானபாதையில் தட்டுத்தடுமாறி ஓட்டமும்நடையுமாகக் குன்றின் உச்சியைநோக்கி வந்து கொண்டிருந்தன.

சூசையைப்போலவே நிக்கோதேமூஸ் சான்ஹெட்ரின் என்ற யூதசங்கத்தில் அங்கம்வகிப்பவர். இருவரும் ஒரேமனப்பான்மை உடையவர்கள். உள்ளூர்வாசியாக இருந்தும், அச்சதிகாரக்கும்பல் அநீதிவழங்கப் போகிறதென்று தெரிந்திருந்தும் முகத்தாட்சண்யத்தாலும், தனக்கேன் பொல்லாப்பு என்ற மனப்பான்மையாலும் அவர் கூட்டத்திற்குச்செல்லவில்லை. ஆனால், உத்தமனைப் பலியிட்டுவிட்டார்களென்று அறிந்தஅவருக்கு இருப்புக்கொள்ளவில்லை. இந்தநிலையில்தான் வீதியில் சந்தித்தார் சூசையை. இருவரும் தாங்கள்இழைத்த பெருந்தவறைஉணர்ந்து மனம் கசிந்தனர். தங்கள்மனச்சாட்சிகளைத் தாங்களாகவே மங்கவைத்து முன்னையகூட்டங்களில் மவுனமாய் இருந்ததன் விளைவே இவ்விபரீதம்என்று நினைத்து ஏங்கினார்கள்.

தங்கள்இருதயங்களில் குடிகொண்டிருந்த உத்தமருக்குத் தங்கள் அன்பையும், காணிக்கைகளையும் அளிக்கக்கிடைத்துள்ள இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்தையேனும் கைவிடாமல், புனிதசடலத்தைத் தக்க மேரைமரியாதையுடன் அடக்கம்செய்யவே அந்நேரத்தில் கொலைக்களத்திற்கு வந்துகொண்டிருந்தனர்.

குன்றின்உச்சியை அடைந்தவர்கள் அங்குகண்ட கோரக்காட்சியைப் பார்க்கச்சகியாமல் கல்லாய்ச்சமைந்தனர். மனுமகனின்உடலில் எஞ்சியிருந்த இரத்தமும், ஊன்நீரும் ஆணி அறைந்த காயங்கள்வழியாய்க் கசிந்துகொண்டிருப்பதையும், உடலிலும், கால்களிலும் ஏற்பட்ட காயங்களினின்று வடிந்தஇரத்தம் சிலுவையைநாட்டி மூடப்பட்டிருக்கும் புதுமண்ணை நனைத்திருப்பதையும், விண்முடி அணியவேண்டியசிரசில் முண்முடி பதிந்திருப்பதையும், எல்லாவற்றையும் விட, இறைவன் என்று நிரூபித்தவரின் புனிதசடலம் சின்னாபின்னமாக்கப்பட்டு இருகள்வர்நடுவே சிலுவையில் அறையப்பட்டிருப்பதையும் கண்ட அவர்கள்மனம் துக்கத்தால் வெடித்துவிடும்போல் இருந்தது.

பிலாத்திடம் பெற்றுக்கொண்ட உத்தரவுப்படி, வெள்ளிமுளைக்குமுன், அதாவது ஓய்வுநாள் துவங்குமுன் சரீரத்தை அடக்கம்செய்யவேண்டும். சூசைக்குஅக்குன்றின் வெகு அருகாமையிலேயே தன்குடும்பத்திற்கென்று புதிதாய்வெட்டிய ஓர்கல்லறை இருந்தது. அடக்கத்திற்கென 100 றாத்தல்நிறையுள்ள பரிமளவர்க்கங்களும், வெள்ளைப்போளமும் வாங்கிவர வேலையாட்கள் அனுப்பப்பட்டனர். யேசுவின்சடலம் சிலுவையினின்று இறக்கப்பட்டது. ஏவலாள்பின்தொடரத் திமெத்ரியுஸ்தானே வாசனைத்திரவியங்களைச் சுமந்துகொண்டு ஓடோடியும் வந்துசேர்ந்தார். உள்ளத்தின் உணர்ச்சிகளை அவன்கண்கள் நீராய்ப் பெருக்கின.

பரமனால் பக்குவமடைந்த பாவை ஓர்பக்கம், வியாபாரம் பாழடைந்ததே என்றுஎண்ணிக் கருவியவியாபாரி மறுபக்கம். இருவரும் உயிரற்ற உன்னதன்சடலத்தில் ஏற்பட்டகாயங்களைத் தங்கள்கண்ணீரால்கழுவிப் பரிமளங்களால் மூடினார்கள். இறுதியில் தன் இருதயத்தையே அன்பளிப்பாகப் பறிகொடுத்தான் பரமனுக்குப் பரிமள வியாபாரி. தான்அடைந்த கஷ்டங்களெல்லாம் தனக்குக்கிடைத்த இரட்சண்யத்தின்முன் துச்சமாகநினைத்துப் பெருமிதமடைந்து பேரானந்தக் கண்ணீர்சொரிந்து தனது இல்லிடம்ஏகினான் திமெத்ரியுஸ்.


# விற்பனைக்கு இருக்கின்றன

## கத்தோலிக்கு கீர்த்தனைமாலை

PART 1.

லத்தீன் கீர்த்தனைகள்

பிரதிவிலை 2 ரூபா 25 சதம்

* * *

யேசுநாதரின் சுவிசேஷம்

அல்லது

நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை

Harmony of the Four Gospels

புதிதாக வெளிவந்திருக்கும் ஓர் அருமையான நூல்

பிரதிவிலை 2 ரூபா 95 சதம்

* * *

பூசை உதவிமந்திரம்—பிரதிவிலை சதம் 40

* * *

செபச்செண்டு—பிரதிவிலை ரூபா 1

* * *

திவ்விய பூசையின் சாதாரண செபங்கள்—பிரதிவிலை சதம் 60

எல்லாவற்றிற்கும் தபாற்செலவு பிரத்தியேகம்

கிடைக்கும் இடம் :

மனேஜர்

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்

யாழ்ப்பாணம்.


# உங்களுக்குத் தெரியுமா?

1. ஐரோப்பிய அரசர்களிலெல்லாம் தமது அரசாங்கத்தாலே அதிகம் குறைந்தசம்பளம் வழங்கப்படுகிற அரசர் யார்?

கிறீஸ்நாட்டின் போல்அரசரே. அவருக்கு வருடமொன்றுக்கு அரசாங்கத்தாலே வழங்கப்படும் சம்பளம் 12,000 பவுண் மாத்திரமே. இந்தப்பணத்திலிருந்து எடுத்தே அவர் தமது பணியாளருக்குச் சம்பளங்கொடுக்கவும், அதென்ஸ் நகரிலுள்ள தமது மாளிகைச் செலவைப் பொறுக்கவும், அரசாங்ககருமமாக நடத்தும் பிரயாணச் செலவுகளைத் தானும் சமாளிக்கவும் வேண்டியவர்.

2. உலகின் மகாப்பெரிய கதிர்ப்பாத்திரம் எங்கே இருக்கின்றது?

ஸ்பானியதேச ரொலெடோநகர் ஆசனக்கோவிலில் இருக்கின்றது. இதுவே உலகின் மகாவிலையேறப்பெற்ற கதிர்ப்பாத்திரமுமாகும். 16-ம்நூற்றாண்டில் வசித்திருந்த ஓர் ஜேர்மன் பொற்கொல்லரான ஹென்றி ஆர்வே என்பவரின் சிறந்தகைவேலைப்பாடே இதில் பெரும்பகுதியாய் அடங்கியுள்ளது. இதனைச்செய்வதிலே 40 றாத்தல் சுத்ததங்கமும், சுமார் 440 றாத்தல் வெள்ளியும் உபயோகிக்கப்பட்டுள்ளன. விலைமதித்தற்கரிய அநேகமுத்துகள் இதிற்பதிக்கப்பட்டிருக்கின்றன. இது 5,600 பகுதிகளாகச் செய்யப்பெற்றுப் 12,500 புரியாணிகளால் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 12 அடிக்குமேலாகும். இதனைப்பூரணமாகச் செய்துமுடிக்க நூறு வருடங்களுக்குமேல் சென்றது. 260 அழகானசிறிய சுரூபங்களாலே இது அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் மிகப்பெரிதான ஒன்று தங்கத்தினால் செய்யப்பட்டதாய்ப் புதியஉலகத்திலிருந்துகலம்பஸ்அவர்களால்கொண்டுபோகப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

3. பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவரான அர்ச். பத்தலோமையாரைப்பற்றிச் சுருக்கமாக யாது சொல்லலாம்?

இவர் நதானியேலுடன் அறிமுகஞ்செய்யப்படுகின்றார். நதானியேலைப்பற்றி அர்ச். அருளப்பர் தமது சுவிசேஷத்திலே 1-ம் அதிகாரம் 47-ம்வசனத்தில் எடுத்துக்கூறியிருக்கின்றார். அர்ச். பர்த்தலோமையார் அர்ச். பிலிப்புவின்நண்பர். இவர் நாகரீகமற்ற கிராதர்களாலே உயிருடன்தோலுரிக்கப்பெற்றதன்மேல் சிரச்சேதம்செய்யப்பட்டு வேதசாட்சியாயினார். ரோமாபுரியிலுள்ள அர்ச். லத்தறன் அருளப்பர் மகாலய தம்பங்களுக்கெதிரே பன்னிரு அப்போஸ்தலர்களினதும் பிரமாண்டமான திருச்சுரூபங்கள் இருக்கின்றன. அவற்றிலே அர்ச். பத்தலோமையார் தாம் தோலுரிக்கப்பட்டதன் ஞாபகமாகத் தம்முடைய தோலைக் கையிற்பிடித்தவண்ணம் காண்பிக்கப்படுகின்றார்.

4. சென்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலிலே கணவனும் மனைவியுமான தம்பதிகளாய்ப் போட்டியிட்ட அபேட்சகர்கள் யாவர்?

(1) திரு. வெஸ்லிகுணவர்த்தனவும் * பாரியாரும். (2) * திரு. வில்மட் பெரேராவும், பாரியாரும், (3) * திரு. ஆர். ஈ. ஜயதிலகவும், பாரியாரும் (4) டக்றர் எஸ். ஏ. விக்கிரமசிங்கவும், * பாரியாரும். இவர்களில் புள்ளிஅடையாளம் இடப்பட்டவர்களே வெற்றிபெற்றார்கள்.

5. சென்றபொதுத்தேர்தலிலே சகோதரர், சகோதரிகளாய்ப் போட்டியிட்ட அபேட்சகர்கள் யாவர்?

(1) * திரு. றொபேட் குணவர்த்தனவும், அவர் சகோதரி திருமதி. கரோலின் குணவர்த்தனவும், (2) * திரு. எட்மன்ட் சமரக்கொடியும், அவர் சகோதரி திருமதி ஆர். ஈ. ஜயதிலகவும் (3) * திரு. என். எச். கீர்த்திரத்னவும், அவர் சகோதரியும். இவர்களில் புள்ளி அடையாளம் இடப்பட்டவர்களே. வெற்றிபெற்றார்கள்.

# நானாசங்கதிகள்

—ஐதிராபாத்திலே பிரபுத்துவ குடும்பத்தைச்சேர்ந்த நவாப் சகீர் யார்ஜங் பகதூர் என்பவரும், அவர்பாரியாரான பீகம் ஹாஷ்முதன்னியாவும் சென்ற சித்திரைமாசத்திலே ஐந்துலட்சம் ரூபா பெறுமதியான ஆபரணங்களை இந்தியாவுக்கு வெளியே களவாகக்கொண்டுசெல்ல முயற்சித்த குற்றத்துக்காகச் சென்ற புதன்கிழமை பம்பாய்நகரிலே 15 லட்சம்ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

— டில்லிநகரிலே சட்டசபைகூடும்போது அங்கத்தவர்களின் சம்பளத்துக்குமாத்திரம் ஒருநாளைக்கு 30,000 ரூபா செலவாகிறது. அங்கு மக்கள் சபைகூடும்போது நாள் ஒன்றுக்கு 20,000 ரூபாவும், இராச்சியங்களின் சபைகூடும்போது நாள் ஒன்றுக்கு 10,000 ரூபாவும் செலவாகிறது. கூட்டங்கள் தொடர்ந்து ஒருமாதகாலம் நடந்தால் அங்கத்தவர்கள் டில்லியில் தங்கியிருக்கவே ஒன்பதுலட்சம் ரூபா செலவாகின்றது.

—ஐதிராபாத் நிசாம் சமீபத்திலே பம்பாயில் மூன்றுவாரம் தங்கியிருந்தார். அந்தமூன்றுவாரத்திலும் அவரும், அவர்குடும்பத்தினரும் பருகுவதற்காகத் தினந்தோறும் ஐதிராபாத்திலிருந்து 150 கலன் தண்ணீர் றெயில்மூலம் பம்பாய்க்கு அனுப்பிவைக்கப்படலாயிற்று. நிசாம் ஐதிராபாத்திலுள்ள ஒரு குறித்த கிணற்றின் தண்ணீரைத்தவிர வேறெந்தத் தண்ணீரையும் பருகுவதில்லை.

—சென்ற 1951-ம்ஆண்டின் தைமாசத்துக்கும், நிகழும் 1952-ம்ஆண்டின் சித்திரைமாசத்துக்குமிடையிலே கம்யூனிஸ்த சீனாவிலிருந்து 1,763 கத்தோலிக்க மிஷனரிமார் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். தற்போது சீனாவில் பிறதேசமிஷனரிமாராய் 1,435 பேரே இருந்து வருகிறார்கள். இவர்களில் குருமாரும், மேற்றிராணிமாரும் 1,048 பேராவர்.

—இத்தாலியிலே நேப்பிள்ஸ்நகரில் தீராப்பிணியாளருக்கென்று இருந்துவருகின்ற ஆஸ்பத்திரியிலே கப்புச்சின் சபையைச்சேர்ந்த வண. பேர்னாட் தாநோலாசுவாமியார் அங்குள்ள நோயாளரின் தேவைகண்டு சமீபத்திலே தமது சரீரத்திலிருந்து 149-ம்முறையாக இரத்ததானஞ்செய்திருக்கின்றார்.

—போர்த்துக்கால் யுத்தத்திலிருந்து காப்பாற்றப்படுமானால், கிறீஸ்துநாதரின் பிரமாண்டமான திருச்சுரூபம் ஒன்றை ஸ்தாபிப்பதாகப் பாத்திமாபதியிலே போர்த்துக்கேய மேற்றிராணிமார் 1940-ம்ஆண்டு செய்துகொண்ட நேர்த்தியின்பேரிலே லிஸ்பன்நகருக்கு எதிரேயுள்ள ராகுஸ் நதியின் தென்கரையிலே 350 அடி உயரமான கிறீஸ்துநாதரின் சுரூபம்ஒன்றை அமைப்பதற்கானவேலை சமீபத்திலே தொடங்கப்பட்டிருக்கிறது.

* * *

நீதிபதி—(திருடனைநோக்கி) என்ன, நீ ஒரு வேட்டியும், சால்வையும் திருடியதாக இற்றைக்கு மூன்றுவருடங்களின்முன் வழக்குத் தொடரப்பட்டு இந்தநீதிஸ்தலத்தில் கொண்டுவரப்பட்டாய் அல்லவா?

திருடன்—ஆம், ஐயனே, சரியாய்ச் சொன்னீர்கள். நான் கொண்டுவரப்பட்டது முற்றிலும் உண்மையே. அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால்......

நீதிபதி— ஆனால், என்ன ஆனால்...

திருடன்—ஆனால், ஐயா! ஒருவேட்டியும், சால்வையும் எவ்வளவு காலத்துக்கு எனக்குப்போதும். இதைத் தாங்கள் சிந்திக்கவில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

என்ன தம்பிமாரே! பள்ளிக்கூடமில்லையா?

ஏன் அண்ணை, உங்களுக்குத் தெரியாதா; விடுதலையல்லவா?

என்ன நியாயம்?

மடுவுக்குப் போகிறதற்காகத் தான்.

நீங்கள் ஆராகிலும் போகிறீர்களா?

ஆமாம், அண்ணை! நான், நான். தம்பி பிறந்து 3 வருடமாக வாய்பேசாதிருந்து, கடைசியாக எங்கள் அம்மா மடுமாதாவுக்கு நேர்ந்து இப்போ அம்மா, ஐயா, மாதா, மாதாச்சி என்று பேசத் தொடங்கிவிட்டான். அந்த நேர்த்தியை நிறைவேற்ற அம்மா எங்களைக் கூட்டிக்கொண்டு போகிறா.

உங்களுக்கு என்ன விளையாட்டுத் தானே?

இல்லை, இல்லை. வழிவழியே இடைக்கிடை செபமாலை ஓதிக்கொண்டு போவோம். கோவிலுக்குப் போனதும் அம்மா திரி வேண்டித் தருவா. நாங்கள் கொளுத்துவோம். காணிக்கை போடுவோம்.

அவ்வளவும் தானா?

எங்கள் பயணச் செலவும், பயணக்கஷ்டம் ஆகியசகலதும் அவவுக்காகத் தானே! மடுவில் பூசை காணுவோம. செபமும், விசேஷமாய்ச் செபமாலையும் அதிகமாகச் சொல்லுவோம். மடுவில் செபமாலை சொல்லாதவன் வேறு எங்கு அதைச் சொல்லுவான்.

கடைகள், தெருக்கள் பார்ப்பீர்களாக்கும்!

இப்போ கடைகள் அவ்வளவு இல்லைஎனக் கதைக்கிறார்கள்.

அப்ப மடுவுக்குப் போவது இதற்காகவா? இல்லை, இல்லை. நாங்கள் மாதாவுடைய பிள்ளைகள். எங்கள் மெழுகுவர்த்திகள் மாதாமுன்பாக எப்படிச் சுவாலித்து எரிகிறதோ, அவ்விதம் எங்கள் சீவியமும் மாதாவின் அன்பால் மூண்டெரிந்து அவவை மகிமைப் படுத்தும் என்று வாக்குப் பண்ணவே போகிறோம். மாதா சிறுபிள்ளைகளை மிகவும் நேசிக்கிறா. நிமிர்ந்து அவவுடைய சிங்காசனத்தைப் பாருங்கள். சின்னஞ்சிறு யேசுபாலனைத் தமது கரத்தில் ஏந்தியிருக்கிறா. அவ்விதம் எங்களையும் அரவணைக்க ஆசிக்கிறா. மாதா உங்கள் தம்பிக்குச் செய்த சகாயத்துக்காக நீங்கள் கொடுக்க வேண்டியது காசுபணமல்ல. மெழுகுதிரி போன்ற காணிக்கைகள் அல்ல. உங்கள் பரிசுத்த சீவியமே. மடுமாதாவின் ஞாபகமாக நல்ல ஒரு செபமாலை வாங்கிப் பூச்சியமாக வைத்துச் செபியுங்கள்.

## அழியாது

1. புகழும் பெயரும் அழிந்துவிடும்
புண்ணியம் என்றும் அழியாது.
2. பெருகும் செல்வம் அழிவதுபோல்
பெரியோர் வாக்கு அழியாது.
3. கடலும் மலையும் அழிவுபெறும்
கல்விச் செல்வம் அழியாது.
4. உலகம் நிச்சயம் அழிந்தே போம்
உண்மை வாழும், அழியாது.
5. எல்லாம் அழிந்து ஒழிந்தாலும்
இறைவன் அன்போ அழியாது.

## சூரியன் உதிப்பதைப் பார்

1. சூரியன் உதிப்பதைப் பார்த்திடுவாய்
சுறு சுறுப்பாக எழுந்திடுவாய்.
2. சந்திரன் வளர்வதைப் பார் தம்பீ!
சற்குணனாக வளர்ந்திடுவாய்.
3. ஓங்கி வளர்ந்த மலைபோலே
உயர்ந்த கல்வி பெற்றிடுவாய்.
4. நீலக் கடலலை பார்த்தாயா?
நீயும் அலைபோல் விளையாடு.
5. வீசுங் காற்றினைப் போல்நீயும்
வேகங் கொண்டே உழைத்திடுவாய்.
6. பொழியும் மழைபோல் யாவர்க்கும்
பொதுவாய் நன்மை புரிவாயே.

"ஜெயம்"

## அர்ச். சிறியபுஷ்பம்

"சிறிய புஷ்பம்" என்று அழைக்கப்படும் அர்ச். தெரேசம்மாள் பிரான்ஸ் தேசத்திலே "அலன்கொன்" பட்டினத்தில் பிறந்தாள். சிறுவயதில் தாயை இழந்து விட்டாள். தகப்பனும், மூத்த சகோதரியும் அவளைத் தேவனுடையவழியில் அன்பாக வளர்த்து வந்தனர். அவள் மூன்றுவயதில் இருந்தே சருவேசுரன் விரும்பிய எந்தக்காரியத்தையும் மறுத்தது இல்லை. எப்போதும் தேவனை நேசித்து வந்தாள். ஏழைகளிடம் இரக்கம் உள்ளவள். சகோதரிகளை முழு இதயத்துடன் நேசித்து வந்தாள். ஆனால், சருவேசுரனை மாத்திரமே எல்லாத்துக்கும் மேலாக நேசிக்கவேண்டும் என்று வெகுவாய் ஆசைப் பட்டாள். தனது பதினைந்தாம் வயதில் கார்மேல் கன்னியாஸ்திரிமார் கூட்டத்தில் சேரவிரும்பினாள். வயது சொற்பமாய் இருந்த படியால் சற்றே தாமதிக்க வேண்டியதாயிற்று. ஆயினும் பதினாறும் வயதில் லிசியேயில் உள்ள கார்மேல் மடத்தில் சேர்ந்து கன்னிகாஸ்திரிமாருக்குரிய ஒழுங்குகளைக் கவனமாய் அனுசரிக்கப்பழகினாள்.

தேவன் எங்கள் பிதா என்பதையும், நாங்கள் அவர் பிள்ளைகள் என்பதையும் நன்கு உணர்ந்த தெரேசம்மாள் சருவேசுரனிடம் பிள்ளைக்குரிய நம்பிக்கையும், நேசமும் கொண்டிருந்தாள். அவள் இருபத்திநான்காம் வயதில் இறந்தபோது அவளைப் பற்றி என்ன எழுதப் போகிறார்களோ என்று சிலர் யோசித்தனர். ஆனால், அவள் தனது சீவியம் முழுவதையும், சீவியத்தின் ஒவ்வொரு கிரிகையையும் தேவ நேசத்திற்காகச் செய்து பரிசுத்த தனத்தில் வளர்ந்தாள் என்று அவள் தானே எழுதிய சுய சரிதையில் இருந்து அறியப் படுகிறது. இதுவே புண்ணிய சீவியத்தில் சின்னமலர் காட்டும் சிறியவழி. அவளுக்குப் பதினொராம் பத்திநாத பாப்பாண்டவர் அர்ச்சியசிஷ்ட பட்டஞ் சூட்டி உலகிலுள்ள எல்லாக் கிறீஸ்தவர்களுக்கும் அவளுடைய சீவியம் ஓர் நல்ல முன்மாதிரி ஆகும் என்று கூறியுள்ளார்.

## புன்னைமன்றம்

நாதனும், அவனுடைய நண்பர்களும் கடந்த தேர்தல் நாட்களில் நமது பாராளுமன்றத்தையும், அதன் நடைமுறைகளையும், அங்குள்ள கட்சிகளின் தன்மைகளையும் நன்கு அறிந்து கொண்டார்கள். அதனால் தாங்களும் ஓர் பாராளுமன்றம் அமைத்துத் தம் போன்ற பாலர்களைப் பண்படுத்த வேண்டும்என்ற பான்மை அன்னார் மனதில் அரும்பியது. ஒருநாள் பாடசாலைமுடிந்ததும், தங்கள் இல்லங்களின்மத்தியிலுள்ள புன்னைமரநிழலில் தங்கள் புதிய அரசியல் மன்றத்தை அமைத்தனர். அம்மன்றம் "புன்னை அரசாங்கம்." அவர்களின் பொதுச் சபையில் கணக்கில்லாப் பள்ளிமாணவர் மாணவிகள் அங்கத்துவம் வகித்தனர். ஆனால், கட்சிகள் இரண்டே. ஒன்று "இன்பக்கட்சி." மற்றது "இதயக்கட்சி." இவை இரண்டும் பலகொள்கைகளில் ஒற்றுமை உடையன. வேற்றுமையான கொள்கைகளுமுண்டு.

அது, எங்கள் உண்மை இராச்சியத்தில் உள்ளதுபோல் இனவேற்றுமை அல்ல, மொழி வேற்றுமை அல்ல, மதவேற்றுமை அல்ல, அன்றித் தனியாசு வேண்டுமென்ற கொள்கையும் அல்ல. பதவிமோகத்தில் பாமரரை ஏமாற்ற ஏற்படுத்திய பாபக்கொள்கையுமல்ல. "பணமுள்ளவன் பங்கிட்டு உண்ண வேண்டும்" என்பது இதயக் கட்சியின் கொள்கை. "பணத்தைச் செலவழிப்பது சொந்தக்காரனின் விருப்பம்; அதனை அரசாங்கம் கட்டுப் படுத்தக் கூடாது என்பது இன்பக் கட்சியின் கொள்கை.

கூடிய தொகையினர் இதயத்தை ஆதாரித்தனர், எனவே, நாதன் பிரதமர் ஆனான். நல்லான் நலன்பரிபாலன மந்திரி ஆனான். சாந்தன் சமாதான மந்திரி. குமணன் கொடைமந்திரி. இந்த மந்திரிமார்களும், ஆட்சிக் கட்சியின் மற்றைய அங்கத்தவர்களும் தங்கள் காரியங்களில் சிறிதும் பிசகமுடியாது. தவறினால் இன்பக் கட்சியினர் இவர்களைச் சும்மா விடமாட்டார்கள். எதிர்க் கட்சியின் எதிர்ப்புக்கு அஞ்சியும் தங்கள் கட்சியின் வலிமை விரும்பியும் எல்லா அங்கத்தவர்களும் ஓயாது உழைத்தனர்.

நல்லானும், அவன் நண்பர்களும் பிள்ளைகள் கள் குடிப்பதையும், புகைப்பதையும் தடுத்தார்கள். குடிவெறியால் வரும் தீமையை யாவர்க்கும் இயம்பினர். இதனால் பலர் குடியையும், புகைத்தலையும் நீக்கினர். நீக்காத பிள்ளைகளை அவர்கள் பெற்றாரிடம் காட்டிக் கொடுத்துத் தண்டிக்கச் செய்தனர். பெற்றோருக்குப் பணியாத பிள்ளைகளைப் பலர்கூடிக் கேலிசெய்து நாணம் உறச் செய்தனர்.

சாந்தனின் குழு குழந்தைகளுக்கிடையில் ஏற்படும் சண்டைகளைச் சமாதான முறையில் நீக்கி நாட்டில் சமாசம் ஏற்படுத்திற்று. அகிம்சா தர்மம் அகிலத்தில் பரவ ஒத்துழைத்தது அந்த உத்தம சிறுவர்களின் குழு.

கொடைமந்திரி குமணன், ஏழைப் பிள்ளைகளுக்கு உதவுவதில் ஊக்கம் தளராது உழைந்தான். பணக்காரப் பிள்ளைகள் பலர் பணம் உதவினர். இதைக் கொண்டு ஏழைப் பிள்ளைகளுக்குப் புத்தகம், பென்சில் முதலியன வாங்கி இலவசமாய் அளித்தான் குமணன்.

இந்தப் பாராளுமன்றத்தின் ஒழுங்கும், நடைமுறையும் விரைவிலேயே பெரியார்களின் காதுகளுக்கு எட்டிற்று. ஒருநாள் பலபெரியார்கள் ஒன்று சேர்ந்து ஒளித்திருந்து இவர்கள் மன்றத்தைக் கவனித்தனர். "காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த" கதைபோன்று அன்று புன்னைமன்றத்தில் மாதாந்த அறிக்கை வாசிக்கப் பட்டது. அவ்வறிக்கையைக் கேட்ட பெரியார்கள் ஆனந்தம் கொண்டனர். ஒருவர் எழுந்து: மக்களே! மகத்தான அரசியலை உங்கள் காலத்தில் நீங்கள் கட்டாயம் நிறுவுவீர்கள் என்பதை இன்று நாம் கண்டோம். இனம், சாதி, மதம் இவற்றால் கோரை போல் முளைத்துக் குடியைக் கெடுக்கும் இப்போதைய கட்சிகள்எல்லாம் உங்கள் காலத்தில் உருக்குலைந்து, நீதி, நேர்மை என்ற இருகட்சிகளேநிலவும். உங்கள் வருங்காலம் வளம் பெறுக" என்று உணர்ச்சியுடன் பேசினார். யாவரும் கரகோஷம் செய்தனர்.

சகோதரர் சகோதரிகளே! நீங்களும், உங்கள் நண்பர்களும் பாராளுமன்றங்களை நிறுவி வருங்கால நல்வாழ்விற்கு வழிதேடுங்கள்.

—கரம்

## 'பெரும்பாலும் கம்யூனிஸ்தரே'

இந்தியாவிலே மலையாளக் கரையிலிருந்து களவாகவந்து இலங்கையில் குடியேறுகிறவர்கள் "பெரும்பாலும் கம்யூனிஸ்தரே" என்றும், அதனால் "இந்நாட்டின் ஸ்திரநிலைக்கு மிகப்பெரியதோர் ஆபத்து" ஏற்பட்டிருக்கிறதென்றும் அரசினர் கூறுகின்றனர். இவர்கள் பெருந்தொகையாக வருவதானது இந்நாட்டின் பொருளாதாரநிலைக்கும், பொதுச்சன சுகாதாரத்துக்கும், பிழைப்பில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் பெரிதும்பங்கம் உண்டுபண்ணுகிறது. அதனால் கற்பிட்டிமுதல் செம்பியன்பற்றுவரையிலுள்ள சுமார் 250 மைல் தூரத்துக்கும் கடலைக்காவல் செய்வதற்குத்தீவிரவேகமுள்ள ஒருதொகையான கரைக் காவல் போர்வள்ளங்களைத் தருவிக்கத் தீர்மானமாயிருக்கிறது. இவைகள் வந்துசேருகிறவரையிலே களவாகவருகிறவர்களைக் கண்டறியப் பொலிஸ்காரருக்குப் பட்டாளத்தவர்கள் உதவிசெய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவர்த்தமானம்

## அணுச்சக்திப் பந்தையம்

அணுச் சக்தியைப் பயன்படுத்திக் கடல்களிலே உபயோகிக்கத்தகுந்த புதிய சாதனங்களைக் கண்டுபிடித்து முதன்மை வகிப்பதில் பிரித்தானியும், அமெரிக்க ஐக்கியதேசமும் பந்தையம் போட்டு வேலைசெய்கின்றன. இரு தேசங்களையுஞ்சேர்ந்த விஞ்ஞானிகளும், எஞ்சினியர்களும் அணுச்சக்திகொண்டு செலுத்தப்படும் சப்மறின்களைக்கட்டுவதிலும், கடல்மேல் செல்லுங் கப்பல்களுக்கென்று அணுச்சக்தியந்திரங்களைக் படம்போட்டுக் கட்டத் தயாராவதிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள். மிகப்பெரிய தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய அமெரிக்க ஐக்கிய தேசமானது அணுச்சக்தியால்செலுத்தப்படவிருக்கும் நோட்டிலஸ் எனும் தனது புதியசப்மறினைக்கட்டுவதில் ஏலவேதானே எவ்வளவோதூரம் முன்னேற்றமடைந்து முதன்மைவகிப்பதாக வாஷிங்ரன் நகரிலே அதிகாரபூர்வமான நம்பிக்கை இருந்துவருகிறது. கப்பல்களிலே —விசேஷமாய்ச் சப் மறின்களிலே அணுச்சக்தியைப் பிரயோகிக்கும்வேலையில் ருஷியரும் ஈடுபட்டிருக்கின்றனர்என்பதில் அமெரிக்க அதிகாரிகள் அற்பசந்தேகமே கொண்டுள்ளார்கள்.

## கம்யூனிஸ்த பயிற்சிக்கழகம்

தற்போது ருஷியாவின் ஆதிக்கத்தில் இருந்துவருகின்ற கிழக்குஜேர்மனியிலே ஓர்நடுக்காட்டில் பன்னிரு அடி உயரத்துக்கு முள்ளுக் கம்பிகொண்டு சுற்றிவேலியிடப் பெற்றதாய்ப் போர் வீரர்கள்தங்கும் பாரியகட்டடம் ஒன்றில் ருஷியாலேபயிற்சியளிக்கப்பட்ட ஜேர்மன்மாக்சியர்கள் மேற்குஜேர்மனியையும் கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனியின்பக்கமாய் எவ்விதமும்வெற்றி கொள்ளும்விஷயமாய் வருங்கால கம்யூனிஸ்த அதிகாரிகளைப் பயிற்றிவருவதாய்ப் அக்கழகத்தினின்றும் தப்பியோடிப் பொன்னகர்போய்ச் சேர்ந்திருக்கும் மாணவன்ஒருவன் இரகசிய அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறான். இந்தஅறிக்கை தற்போது மேற்குஜேர்மன் அரசியற்கட்சிகளில் ஒன்றின்வசம் இருக்கிறது. இந்தப் பயிற்சிக்கழகம் போஸ்ற் சின்னு என்னுமிடத்திலே ஹிற்லரின் பீரங்கிப் படைப்பயிற்சிக்கழகம் இருந்துவந்த இடத்திலே 10லட்சம் பவுண்செலவிட்டுக்கட்டப்பட்டுள்ளதாம். கிழக்குஜேர்மனியின் உபபிரதமரின் நாமத்தைத் தாங்கியதாய் "வால்றர் அல்பிறிச்ற் பரிபாலனகழகம்" என அழைக்கப்படுகிறது. வெளியுலகத்துக்கு முற்றாக மறைந்துள்ள இக்கழகத்திலே கிழக்குஜேர்மன் சர்வகலாசாலைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட அனேக நூற்றுக் கணக்கான ஜேர்மனியவாலிபகம்யூனிஸ்தர்கள் மேற்கு ஜேர்மனியையும் கம்யூனிஸத்தின்வாயில்போடப் பயிற்சியடைந்து வருகின்றார்களாம்.

## யுத்தம்பற்றிய எச்சரிக்கை

ஆர்ஜென்ரீனுவின் ஜனதிபதியான திரு. ஜூவான் பெறன்அவர்கள் அந்நாட்டின் ஜனதிபதியாகச்சென்ற 12-ந் திகதியன்று திரும்பவும் பதவியேற்றுப் பேசியபோது: "ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்கு நீடிக்கக்கூடிய யுத்தம் ஒன்று வருகிறது" எனக்கூறி அவசர காலத்தைச் சமாளிக்குமாறு அவசியம் தேவைப்படும் பொருட்களையெல்லாம் உற்பத்தி செய்வதற்குத் தமதுநாடு முழுவதும் தயாராயிருக்கவேண்டுமென எச்சரித்திருக்கின்றார். "யுத்தம் தொடங்கியபின் கமத்தொழிலுக்குரியசாதனங்களையும், லொறிகளையும், கார்களையும் நமக்குயார் அனுப்பிவைப்பார்கள்? அதனுல் நாமாகவே அவைகளை உற்பத்திசெய்ய வேண்டும்; அதைத் தொடக்குவதற்கு இதுதான் காலம்; அமெரிக்க கார்களைப்போலச் சிறந்தனவாய் நாமும் கார்களைக்கட்டுகிறோம்; அமெரிக்கர்இங்கே கார்ஒன்று 1,500 பவுணுக்கு விற்கின்றனர். ஆனுல், நமது கார் 750 பவுண்பெறுமதியுடையது; நாமும்தொகைவகையாகக் கட்டுமிடத்து அவர்கள் இங்கே தங்கள்கார்களை விற்கமாட்டார்களெனவும் கூறலாயினர்.

# மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஐயா! நாடுநலம்பெற்று முன்னேறுதற்குப் பலமார்க்கங்கள் காணப்படுகின்றன. ஆயினும்இடையிடையே சில போலிப்பெரியார்கள் தோன்றிச் செப்படிவித்தை காட்டிக் கிராமவாசிகளின் ஒற்றுமையைச் சீர்குலைத்து வருவதைக்காணும்தோறும் நெஞ்சம்புண்ணுகின்றது. அந்தோ! இந்தப்பஞ்சோந்திகள் எப்போது நாட்டைவிட்டு நடைகட்டுவார்களோ அப்போதே நாடு நல்லமுன்னேற்றம் அடையுமெனக் காத்திருக்கலாம்.

திருஇருதயத்திருநாள்—உயிலங்குள விசாரணைப்பங்கைச் சேர்ந்த சகல கத்தோலிக்க பாடசாலைகளினதும் ஒத்துழைப்பாலும், வண. கட்டளைக்குரவரின் அயராமுயற்சியாலும் சென்ற 20ந் திகதியன்று இருதயநாதர் திருநாள் மிகுந்த பக்தியருட்சியாய்க் கொண்டாடப்பட்டது. உயிலங்குளம் அர்ச். பேதுருவானவர் கோவிலிலே முதல் நாள் அதிவண. எஸ். பீற்றர்சுவாமிகளால் திருமணித்தியால ஆராதனை நடத்திச் சீரியதோர் பிரசங்கம் செய்யப்பட்டது. பின்னர் கோவிலின் அண்மையில் அமைக்கப்பட்டிருந்த அழகிய பந்தலிலே மாணவர்களால் ஆடல்பாடல் சிறப்பாகநிகழ்த்தப்பட்டது. இதிலே உயிலங்குள, நொச்சிகுள, பறப்பாங்கண்டல், ஊற்றுவாயன்குள, கற்கடந்தகுள மாணவர்களும் கலந்துகொண்டார்கள். அவ்வேளை பறப்பாங்கண்டல் கத். பாடசாலைத் தலைமைஆசிரியர் எம். டானியல்றேச் அவர்கள்ஆரம்பஉரையும், உயிலங்குளக் கத். பாடசாலைத் தலைமைஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்கள் நன்றியுரையும் கூறினுர்கள். இதனைத்தொடர்ந்து பெருவிருந் தளிக்கப்பட்டது. திருநாளன்றுகாலை வண. கட்டளைக்குரவர் பாடற்பூசை நிறைவேற்றித் திவ்வியநற்கருணைச் சுற்றுப் பிரகாரம் நடத்திவைத்தனர். அன்று வங்காலை, நானுட்டான், அரிப்புக் கட்டளைக்குரவர்களும் சமுகமளித்திருந்தார்கள்.

பெரிய சோயில்— யாழ்ப்பாணத்திலே பெரியகோயிலெனப் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோயில் அழைக்கப்படுவதுபோன்று இங்கும் பரிசுத்த கூட்டத்துமாதாவின் புராதனகோயில் அழைக்கப் பட்டுவருகிறது. இக்கோயிலிலே சமீபத்திலே கட்டளைக்குரவர் வண. எவ். றெஞுர்ட் சுவாமியவர்களதும், குருகுலக்கத்தோலிக்கமக்களினதும் அயராமுயற்சியால் புதுப்பித்துத் திருத்தும் திருப்பணி ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. இப்பெரியகோவில் முன்னிலும்சிறப்புடையதாக அமைக்கப்படுமெனத் தெரியவருகிறது.

மாந்தைப்பதி— மடுமாதாவின் பழைய சிம்மாசனமாகவும், லூர்துகெபியின் இருப்பிடமாகவும் திகழ்வதான மாந்தைத் திருப்பதிக்குச் சொந்தமான பூர்வீககாணிஎல்லை மீண்டும் வலியுறுத்தப்பட்டிருப்பதாக அறிந்து சந்தோஷங் கொள்ளலானேன். இதிலும்பன்மடங்கு சந்தோஷம் மாதா பக்தர்களுக் குண்டாகுமெனலாம். இப்போது இதன்முன்பாகச்செல்லும் வீதியைச் செப்பனிட்டு இப்பதிக்குரிய நிடார்நிலத்தின் இருமருங்கும் வெட்டப்படுகிறது. இவ்விதம்வெட்டி மண் எடுக்கும்பகுதியின் ஓரங்களைக் கல்லால் கட்டிச் சிமெந்துபூசவேண்டும். அன்றேல் மாரிகாலத்திலே மழையால் அழிக்கப்பட்டுத் தரைசேதமுறும். இதையிட்டுப் பகிரங்கவேலைப் பகுதியார் கவனிப்பார்களாக.

# பழவகைகள்

நாம் பழவகைகளை விரும்பும் தேசத்தவராயிருந்தாலும் பழவகைகளைப்பற்றித் துரதிஷ்டவசமாகச் சிலவிசித்திரமான—மூடப்போக்குள்ள கொள்கைகளை உடையவர்களாயிருக்கிறோம். நாமஏன் அப்பிள், திராட்சை, பீச் ஆதியவைகளுக்குப் பெருவிலை கொடுக்கிறோம்.

தினம் ஒரு அப்பிள் சாப்பிட்டால் டக்றரின் தேவையை நாடவேண்டியதில்லைஎன்பது ஐரோப்பிய நாடுகளில் சரியாயிருக்கலாம். ஆனுல், இங்கு சில பப்பாளித்துண்டுகளைச் சாப்பிட்டால் இதிலும்பார்க்கப் பெரியபலனைப் பெறலாம். அப்பிளும், திராட்சையும் பார்ப்பதற்கு அழகாகவும், மிகவும்உருசியாகவும் இருந்தாலும் சீவசத்துக்கள் சம்பந்தப்பட்டமட்டில் அவை நமது நம்புட்டானைவிடச் சிறந்தவையல்ல. போஷணை நிபுணர்கள் நெல்லியையும், பப்பாளிப்பழத்தையும் விசேடமாகக் குழந்தைகளுக்கும், இந்நாட்டு எல்லாப்பழங்களையும் பெரியவர்களுக்கும், சிபார்சுசெய்கின்றுர்கள்.

ஒவ்வொருவீட்டுக் கொல்லையிலும் வாழையையோ, பப்பாளியையோ ஏன் நடக்கூடாது? நீங்கள் வருடத்தின் எல்லாக்காலத்திலும் பப்பாளியையோ, வாழையையோ பெறமுடியும். பப்பாளிப்பழங்களும், மாம்பழங்களும், பீச், பியர்ஸ், அப்பிள், திராட்சை ஆதிய பழங்களிலும்பார்க்கப் போஷணைச்சத்துக்கூடியவை என்பது உங்களுக்குத் தெரியுமா? தோடம்பழம் இல்லையென்றே, விலை கூடிவிட்டது என்றே வருந்தாதீர்கள். அதற்குப் பதிலாக நாம் பப்பாளியையும், தக்காளிச்சாற்றையும், நெல்லியையும் எந்நேரமும் உபயோகிக்கலாம்.

இதோ நமதுநாட்டுப் போஷணைச் சத்துள்ள பழங்களின் அட்டவணை:— பப்பாளி, நெல்லி, தோடை, ஆம்பராங்காய், வாழை, "பாஷன்" பழம், நாரத்தை, கொய்யா, முந்திக்கொட்டைப்பழம், மாம்பழங்கள்.

நாம் அரிசியை உணவாகக்கொள்ளும் தேசத்தினர். இத்தானியத்தைப் பலவிதத்தில் சமைத்து உண்ணக்கூடுமாகையால் நாம் இவ்வழகிய தானியத்தையிட்டுப் பெருமைப்படுகிறோம். நன்ருகத் தீட்டப்பட்ட பச்சைஅரிசி போஷணைக்குறைவுள்ளதாய் இருப்பதாகச்சந்தேகமறத் தெரிந்திருந்தாலும் நமது நாட்டரிசியின் விஷயத்தில் இன்னெருவிதமான கதையையே தெரிந்துகொண்டிருக்கிறோம்.

நம்மில் அதிகம் அதிகமானோர் நாட்டரிசியையும், புழுங்கல் அரிசியையும் உணவாகக்கொள்ளுகிறோம். அரிசியிலுள்ள உணவுச்சத்துக் கெட்டுப்போகாது. நமக்குத் தெரியாமலே மிகவும் சிறந்ததும், எளிமையுமானமுறையில் நெல் அரிசியாக்கப்படுகின்றது. நமது நாட்டரிசியைக் கழிவுப்பொருட்களின்றிப்பெற்று விற்பனைசெய்ய முடியுமானுல் சமைப்பதற்குமுன் அரிசி பலமுறை கழுவப்படுவதைத் தவிர்க்கலாம். எத்தனைமுறை கழுவுகின்றோமோ அவ்வளவிற்குப் போஷணைச்சத்தை நாம் இழக்கின்றோம். அப்பம், இடியப்பம் முதலியவற்றைத் தயாரிப்பதற்காக உபயோகிக்கப்படும் பச்சைஅரிசியைக் கழுவுவதால் இன்னும் அதிகமான போஷணைச்சத்து இழக்கப்படுகிறது.

அரிசியைச் சமைப்பதற்கு மிகவும் குறைந்தஅளவு தண்ணீரை உபயோகிப்பதான மிகவும்நல்ல பழக்கத்தையும் நாம் பழகிக்கொள்ள வேண்டும். ஏனெனில், பெருந்தொகையான சீவசத்துகளையும், உலோகச்சத்துகளையும் கஞ்சியோடு இழந்துவிடுகிறோமென்பதை நாம் உணரவேண்டும்.

(அரசினரால் வெளியிடப்பட்ட தேசிய உணவுப்பிரசாரத்திலிருந்து அனுவதிக்கப்பெற்றது.)

# "வெள்ளிவிழா"

மாதகலை அர்ச். தோமையார் கல்லூரியிலே 25 வருடங்களாகத் தன்னலங்கருதாது, பிறர்நலமே பெரிதெனக்கொண்டு ஆசிரியத்தொண்டாற்றி வருகின்ற ஆசிரியர்கள் திரு. J. V. ஞானப்பிரகாசம், திரு. V. எக்கநாயக எனுமிருவரும் தங்கள் 25-ம் ஆண்டு நிறைவு விழாவைச் சென்றவியாழன், சனிவாரங்களில் இனிதேகண்டு இன்புற்றனர். வியாழனன்று சாயந்தரம் மாணவர்கள்எல்லோரும் கல்லூரிமண்டபத்தில் குழுமினர். கரகோஷம் கடல்போல் பரக்க, ஆசிரியர்குழாமும், தாபன உதவித்தலைவர் சுவாமிகளும், விழாநாயகர்களும் மேடையிலே காட்சிஅளித்தார்கள். அவ்வமயம் தேசிய பாஷைகளில் மாணவர்இருவர் வாழ்த்துக்கீதங்கள் படித்தனர். பின்னர் வாழ்த்துப்பத்திரங்கள் தனித்தனிபடித்துக் கொடுக்கப்பட்டதோடு, பணமுடிப்புகளும் வழங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து முப்பாஷைகளிலும் மும்மாணவர் வாழ்த்துமொழிகள்கூறியதும் உதவித்தலைமை ஆசிரியர் அன்னுரின் அரிய சேவைகளைப் பாராட்டிப்பேசினுர். ஈற்றில் தலைவர்புகழுரையுடன் வியாழன்கழிய, சனிவாசந் தோன்றியது. அன்றுகாலை யூபிலித்தோத்திரபூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. 9 மணிக்கு ஆசிரிய-மாணவ கோஷ்டிகளிடையே சாட்டைப்பந்தாட்டம் நடைபெற்று முடிந்ததும் பகற்போசனம்வழங்கப்பட்டது. சாயந்தரம் 3மணிக்குப் பலவித தோற்றக் காட்சிகளுடன்கூடிய உதைபந்தாட்டம் நடந்தது. அதில்வெற்றிபெற்றோருக்கு விழாநாயகர்கள் பரிசில்கள் வழங்கினர். இரவு 7 மணிக்கு ஆசிரியகுழாம் தனதுநன்றியைத்தெரிவித்து உபசாரங்கள் வழங்கியது. கடைசியாகப் பலரும்கூடிச் சிற்றுண்டிஉபசாரணையிற்கலந்து, சங்கீதவெள்ளத்தில் தவழ்ந்து வெள்ளிவிழாவை விமரிசையாய்முடித்தனர்.

ஆசிரியர், P. J. T.

# மரணசங்கதி

கரம்பன், சுவாம்குட்டிசவிரிமுத்துவின் புதல்வியும், திரிகோணமலையிலே மேஸ்திரியாராயிருந்து காலஞ்சென்ற திரு. எம். யோசெவ் பூபால்என்பவரின் மனைவியுமான றோசம்மாஎன்பவ கொழும்பு, அரசினர்பெரிய ஆஸ்பத்திரியில் நடைபெற்ற ஓர்சத்திரவைத்தியத்தைத் தொடர்ந்து, அந்தியதேவதிரவியானுமானங்களை நல்லறிவுடன்பெற்று இம்மாதம் 13-ந் திகதியன்று தனது 59-ம் வயதிலே மாணத்திரையில் மறையலாயினு. யாழ்ப்பாணத்திலே வசிக்கின்ற இவளின்ஏகபுதல்வி திருமதி இம்மனுவேல் மாகிறேற் பஞ்சமணியும், நாயகரும் இவளின் மரணசெய்தியை அறியவந்ததும் தங்கள்இனசனருடன் துக்கங்கொண்டாடத் திரிகோணமலை சென்றபோது பிரேதம்அடக்கஞ்செய்யப்படாமல் பெரியஆஸ்பத்திரியிலேயே இருப்பதாகச் செய்திகிடைத்து, திங்கட்கிழமை இனசனருடன் அங்கு சென்று துக்கங்கொண்டாடியதும் மறுநாள் செவ்வாய்க்கிழமை சகலவித மரியாதைகளுடனும் அடக்கம் சிறப்பாக நடைபெறலாயிற்று. இவளை இழந்துதுன்புறும் மகள், மருகர் பேரப்பிள்ளைகளுடன் எனது அனுதாபமும் உரித்தாகுக.

R. I. P. —கடிதர்

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 26-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org